34

ஸ்ரீ:

ஸ்ரீமத் விகநஸமஹா குரவே நம:

ஸ்ரீ வைகாநஸ இளைஞர் நற்பணி சங்கம்

இரண்டாம் ஆண்டு விழா மலர் - 1995

SOUVENIR



ஸ்ரீ விகநோ முனீந்த்ர:

SRI VAIKHANASA YOUTH WELFARE ASSOCIATION

ஸ்ரீ வைகாநஸ இளைஞர் நற்பணி சங்கம் (Regd),
24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

24, ELLAIYAMMAN KOIL STREET
WEST MAMBALAM
CHENNA - 33

With Best Compliments from

PROUDLY
PRESENTS

Nathella Anjaneyulu Chetty & Sons

Mylapore,
Madras - 600 004.
Phone : 4940198/4942583

JEWELLERY SCHEME

SCHEME - I

Rs.1,000 × 25 Months	-	Rs.25,000
Bonus	-	Rs. 5,000
		Rs.30,000

NO MAKING CHARGES
NO SALES TAX

SCHEME - II

Rs.500 × 25 Months	-	Rs.12,500
Bonus	-	Rs. 2,500
		Rs.15,000

NO MAKING CHARGES
NO SALES TAX

NAC bears Sales Tax



ஸ்ரீ :

ஸ்ரீமத் விகநஸமஹா குரவே நம :

ஸ்ரீவைகாநஸ இளைஞர் நற்பணி சங்கம்
இரண்டாம் ஆண்டு விழா மலர் - 1995

ஸ்ரீவைகாநஸ இளைஞர் நற்பணி சங்கம் (Regd.)
24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.

ஸ்ரீ

ஸ்ரீமத் விகநஸ மஹாகுரவே நம:

ப்ரார்த்தனா

வந்தே ஸ்ரீநயநோத்பலஸ்ய சசினம் சேஷாசலாதீச்வரம்
ப்ரஹ்மாத்யர்ச்சித பாதபத்மயுகலம் லோகைக நேத்ரோத்ஸவம்!
வாஸிஷ்டை: ஸநகாதிபிர்முனிகனை : ஸம்ஸ்தூயமானம் ஸதா
பக்தானாமகிலார்த்த தாயினமஹம் ஸ்ரீவேங்கடேசம் குரும்!!

ஸ்ரீவைகாநஸ பகவச்சாஸ்த்ர வித்வான்களுக்கு விக்ஞாபனம்

நமது ஸ்ரீவைகாநஸ இளைஞர் நற்பணி சங்கத்தின் குறிக்கோள்களின்படி பகவத் சாஸ்த்ர புஸ்தகங்களை பதிப்பித்து இலவசமாக வெளியிடுவது, வேத சாஸ்த்ர புஸ்தகங்களை கொண்டு நூல் நிலையம் அமைத்தல், இலவச இரத்ததான முகாம்-மருத்துவ உதவிமுகாம் நடத்துதல் ஆகியவை மிகவும் சிறப்பாகவும், விமரிசையாகவும் ஸ்ரீமத் விகநஸாசார்யரின் அனுக்ரஹத்தால் நடந்து கொண்டுள்ளது. இந்த இளைஞர் நற்பணி சங்கம் ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் முடிவடைகிறபடியால் கடந்த ஒரு வருடத்தில் செய்த நற்பணிகளை புகைப்படம் மூலம் இந்த ஆண்டுவிழா மலரில் அச்சிட்டு ப்ரசுரித்து ஸ்ரீவிகநஸாசார்யரின் பாதகமலங்களில் ஸமர்ப்பிக்கிறோம்.

இந்த மலருக்கு விளம்பரம் கொடுத்து உதவிய அனைத்து மஹனீயர்களுக்கும், அவ்வப்போது பற்பல சந்தேகங்களை நிவ்ருத்தி செய்து எங்களுக்கு உதவிய ஸ்ரீ வைகாநஸகுல ஸ்வாமிகளுக்கும் சங்கத்தின் மூலம் ஹ்ருதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டுவிழா மலரை அனைவரும் ஆதரித்து இதன் தொடர்ச்சியான புஸ்தகங்களை வெளியிட நிதிஉதவி செய்து மேன்மேலும் இலவச க்ரந்தங்களை ப்ரசுரிக்க இந்த சங்கத்தை உத்ஸாஹப்படுத்தும்படி அசேஷ ஸ்ரீவைகாநஸகுல ச்ரேஷ்டர்களையும் ப்ரார்த்திக்கிறோம்.

சென்னை - 33

இங்ஙனம்
ஸ்ரீவைகாநஸ இளைஞர் நற்பணி சங்கம்

ஸ்ரீ:

ஸ்ரீமத் வீகநஸ குரவே நம :

ஸ்ரீவைகாநஸ இளைஞர் நற்பணி சங்கம்

24, எல்லையம்மன்கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33

கௌரவத் தலைவர் : ப்ரதிஷ்டாரத்னாகரம் ஸ்ரீ உ.வே.ப.அ. ராகவபட்டாச்சாரியார் (தரமணி)
தலைமை ஆலோசகர் : ஸ்ரீ உ.வே. சுதர்ஸன ஸ்ரீS. சந்தானபட்டாச்சாரியார் (பட்டணம் கோவில்)

ஆலோசகர்கள் :

	ஸ்ரீ. உ.வே. S. வெங்கடக்ருஷ்ண பட்டாச்சாரியார்	(திருவல்லிக்கேணி)
	ஸ்ரீ. உ.வே. N.A. ரங்கஸ்வாமி பட்டாச்சாரியார்	(திருவல்லிக்கேணி)
	ஸ்ரீ. உ.வே. S. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியார் (JAS)	(திருவான்மியூர்)
	ஸ்ரீ. உ.வே. S.V. கோபாலக்ருஷ்ண பட்டாச்சாரியார்	(சிங்கப்பெருமாள் கோவில்)
தலைவர்	: ஸ்ரீD. கோபால பட்டாச்சாரியார்	(முத்தியால் பேட்டை)
உப தலைவர்கள்	: ஸ்ரீ P.V. அனந்தக்ருஷ்ண பட்டாச்சாரியார்	(பைராகிமடம்)
	ஸ்ரீ. V. குருவாயூரப்ப பட்டாச்சாரியார்	(மயிலாப்பூர்)
காரியதரிசி	: ஸ்ரீ. N.S. பார்த்தசாரதி பட்டாச்சாரியார்	(திருவல்லிக்கேணி)
பொருளாளர்	: ஸ்ரீD. மோகன் பட்டாச்சாரியார்	(மேற்கு மாம்பலம்)
மேலாளர்	: ஸ்ரீD. முரளி பட்டாச்சாரியார்	(மேற்கு மாம்பலம்)

நிர்வாக அங்கத்தினர்கள் 1994-95

ஸ்ரீ. T.V. பாஸ்கர பட்டாச்சாரியார்	(பைராகிமடம்)
ஸ்ரீ. V. பார்த்தசாரதி பட்டாச்சாரியார்	(பெரியமுறை - திருவல்லிக்கேணி)
ஸ்ரீ. N.R. வாஸுதேவ பட்டாச்சாரியார்	(திருவல்லிக்கேணி)
ஸ்ரீ. S. முத்து க்ருஷ்ண பட்டாச்சாரியார்	(சங்கேந்தி)
ஸ்ரீ. S. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியார்	(பட்டணம் கோவில்)
ஸ்ரீ. K.M. சௌந்தரராஜ பட்டாச்சாரியார்	(கடுக்கலூர்)
ஸ்ரீ. R. பார்த்தசாரதி பட்டாச்சாரியார்	(தரமணி)
ஸ்ரீ. P.K. வரதபட்டாச்சாரியார்	(புதுவயல்)
ஸ்ரீ. R.V. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியார்	(சூளைமேடு)
ஸ்ரீ. V. கோவிந்தராஜ பட்டாச்சாரியார்	(சைதாப்பேட்டை)

ஸ்ரீவைகாநஸ சாஸ்த்ர க்ரந்த ஆராய்ச்சிக் குழு

வித்வான் ஸ்ரீ. அ. ராமகிருஷ்ண பட்டாச்சாரியார்,	(காலடிப்பேட்டை)
ஸ்ரீ. S. சுதர்ஸன பட்டாச்சாரியார்	(தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம்)
ஸ்ரீ. Dr.S. சுந்தரவரத பட்டாச்சாரியார்	(திருநாவலூர்)
ஸ்ரீ. P.K. ஸந்தான பட்டாச்சாரியார்	(புதுவாயல்)

ஆண்டுவிழா மலர் கமிட்டி

ஸ்ரீ. P.V. அனந்தக்ருஷ்ண பட்டாச்சாரியார்	(பைராகிமடம்)
ஸ்ரீ. S. முத்து க்ருஷ்ண பட்டாச்சாரியார்	(சங்கேந்தி)
ஸ்ரீ. N.S. பார்த்தசாரதி பட்டாச்சாரியார்	(திருவல்லிக்கேணி)
ஸ்ரீ. D. மோகன் பட்டாச்சாரியார்	(மேற்கு மாம்பலம்)
ஸ்ரீ. T.V. பாஸ்கர பட்டாச்சாரியார்	(பைராகி மடம்)

ஸ்ரீ :

ஸ்ரீ விகநஸ மஹா குரவே நம :

ஸ்ரீ விகநஸ ஸ்தோத்ர பாட:

ஸ்ரீ விகநஸாஷ்டா விம்சதி நாம ரத்நாவளி :

சிரௌதஸ்மார்த்தாதிகம் கர்ம நிகிலம் யேநஸம்ஸ்ரிதம்।
தஸ்மை ஸமஸ்தவேதார்த்தவிதே விகநஸே நம :।।

சருதி ஸ்ம்ருதி நதீபூர்ணம் சாஸ்த்ரகல்லோல ஸங்குலம்।
விஷ்ணு பக்த்யுதகம் சுத்தம் வந்தே ஸ்ரீ விகநோர்ணவம்।।

ஸ்ரீமத்யாதிம பூருஷே ருஷிகணாநேவம் ப்ருவாணே புதாந்
பூலோகே அவதாரம்யஹந்து பவதாமேகோஸ்து மத்பூஜக :।
வ்யாஸே ச்வாஸபரே சுகே பகமதௌள போதாயநே தாவதி
ப்ராஹாஹம் விகநோ முனி: ப்ரதிதினம் ஸாஹஸ்ர மாகஸ்ஸஹே।।

நாராயணம் ஸகமலம் ஸகலாமரேந்த்ரம் வைகாநஸம் மம
குரும் நிகமாகமேந்த்ரம்। ப்ருக்வத்ரி காஸ்யப மரீசிமுகாந்
முனீந்த்ராந் ஸர்வாநஹங்குலகுரூந் ப்ரணமரமி மூர்த்நா।।

வஸந்தயாஜிப்ரமுகா: ப்ரஸித்தா: வைகாநஸா யே ச
மஹாநுபாவா:। தேஷாமஹம் பாஷ்யக்ருதாம் குரூணாம்
பாதாரவிந்தம் ப்ரணமாமி மூர்த்நா।।

யேஷாமாத்யம் வைஷ்ணவம் ஸ்ருஷ்டிராத்யா சாகாப்யாத்யா
ஸம்த்ரமாத்யம் ஜகத்யாம்।தேஷாம் விப்ரச்ரேஷ்டவைகா-
நஸாநாம் பாதாம்போஜம் பாவயாம்யந்தரங்கே।।

பக்தாங்க்ரிரேணு: ப்ரதமோ குரூணாந்த தாதயோ யே
விகநோ மதஸ்தா:। தேஷாம்குரூணாம் சரணாரவிந்த
தீர்த்தேநஸிஞ்சாமி சிரோ மதீயம்।।

யத்ஸூத்ரம் சருதிஸங்கதுக்த ஜலதேரப்யுத்குதம் ப்ரஹ்மணா
லோகாநாமுபகாரகம் விகநஸா தத்தைத்தீரியாம்ருதம்।

ஸ்ரீமச்சராமணகாபிதா முனிவரைர் மந்வாதிபிர்வேதிதம்
விஷ்ணுப்ரீதிகரா விபாந்தி நிதராம்தே விப்ரநாராயணா;।।

விப்ரநாராயணாஸ்ஸந்தஸ்ஸமூர்த்தாத்வரகோவிதா :।।
வைகாநஸா ப்ரஹ்மவிதோ யோகஜ்ஞா வைஷ்ணவோத்தமா:।।

விஷ்ணுப்ரியா விஷ்ணுபாதாச்சாந்தாச் சராமணகாச்ரயா:।
பாரமாத்மிக மந்த்ரக்ஞா: ஸௌம்யாஸ் ஸௌம்ய மதாநுகா:।।

விசுத்தா வைதிகாசாரா ஆலய-ர்ச்சந பரகிந:। த்ரயீ
நிஷ்டாச்ச ஆத்ரேயா: காச்யபா பார்க்கவாஸ் ததா।।

மரீசி மதகா மாந்யா அநபாயிகணா:ப்ரியா। ப்ருக்வாத்ருதா
லோகபயபாபக்நா: புஷ்டிதரயிந:।।

இமாம் வைகாநஸாநாந்து நாமரத்நாவளிம் பரம்। ய:
படேதநிசம் பக்த்யா ஸர்வபாபை: ப்ரமுச்யதே।।

ஆசார்ய ஸ்தோத்ர பாட:

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி ஆசார்யஸ்ய மஹாத்மந:।
வைகாநஸஸ்ய தேவர்ஷே: ஸ்தோத்ரபாடமிதம் பரம்।।

ய:படேச்ச்ருணுயாந்நித்யம் வைகாநஸ குலோத்பவ:।।
இஹலோகே ஸுகம் புங்க்த்வா ஸ யாதி பரமாங்கதிம்।।

ஓம் தேவராஜதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்।
ப்ருக்வாதிமுனிபிர்மான்யம் வந்தே ஸ்ரீவிகநோமுனிம்।।

ஸ்ரீலக்ஷ்மீவல்லபாரம்பாம் விகநோ முனிமத்யமாம்।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்।।

வந்தே விகநஸம் ஸாக்ஷாத்த்யாத்ருமூர்த்திம் ருஷிம் பரம்।
ப்ருக்வாதி முனிஸ்ரஷ்டாரம் ஸுத்ரரத்ந ப்ரவர்த்தகம்।।

நாராயண: பிதா யஸ்ய மாதா சாபி ஹரிப்ரியா।
ப்ருக்வாதிமுனய: புத்ராஸ்தஸ்மை விகநஸே நம:।।

அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்।
தத்பதம் தர்சிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:।।

ச்ரௌதஸ்மார்த்தாதிகம் கர்ம நிகிலம் யேந ஸுத்ரிதம்।
தஸ்மை ஸமஸ்த வேதார்த்தவிதே விகநஸே நம:।।

ச்ருதிஸ்ம்ருதிநதீ பூர்ணம் சாஸ்த்ரகல்லோல ஸங்குலம்।
விஷ்ணுபக்த்யுதகம் சுத்தம் வந்தே ஸ்ரீவிகநோர்ணவம்।।

நாராயணஸ்ய யஸ்யாத்மா விகநா இதி வர்த்ததே।
வேதவேதாங்கதத்வக்ஞம் தம் வந்தே விகநோ முனிம்।।

ச்ராவணே மாஸி ஸம்பூதம் ச்ரவணே சுக்லபக்ஷகே।
பத்மநாப மநோஜாதம் விஷ்ணுபூஜா விசாரதம்।।

குசாஸநே ஸமாஸீநம் ஊர்த்வபுண்ட்ர பவித்ரகம்।
கிரீட ஹாராபரண குண்டலாங்கத பூஷிதம்।।

சிகாயக்ஞோபவீதாப்யாம் த்ரிதண்டேன விராஜிதம்।
வரதாபயஹஸ்தஞ்ச சங்கசக்ரதரம் ப்ரபும்।।

பத்மஞ்ச தக்ஷிணே ஹஸ்தே தாரிணம் பீதவாஸஸம்।
கமண்டலுகடாப்யாம் வை ப்ரம்ஹர்ஷி கணஸேவிதம்।।

துளஸீபத்மமாலாபிஸ் தபஸா ச ஸுசோபிதம்।
பாரமார்த்மிகமந்த்ரக்ஞம் விகநோமுனிமாச்ரயே।।

சங்காரிம் வர்தாபயோத்த்ருத சதுர்பாஹும் ரமாநந்தனம்
ஹஸ்தாப்ஜம்
ஹரிமானஸோத்பவமஹம் பத்மோத்பவஸ்யாக்ரஜம்।
உத்யத்தண்ட கமண்டலாதிபரிதம் கர்பஸ்த சக்ராங்கநம்
வந்தே ஸ்ருக்கரிணாஜிநம் விகநஸம் யோகப்ரபா வல்லபம்।।

ஹேமாச்சாதம் ஸ்படிகஸத்ருசம் வித்யுதூத்பந்நபாஸம்
வித்யாநாதம் குசபரிலஸத் கேதநம் தண்டபாணிம்।

வேதாராவம் ருருமயமஹா வாஹநந்தோச் சதுஷ்கம்
விம்பீஜந்தம் விகநஸமஹம் ப்ராப்தவந்தம் பஜாமி।।

வேதாந்த வேத்ய நிகிலார்த்தவிதாம் வரிஷ்டம்
சக்ராபயாப்ஜவரதோத்த்ருத ஹஸ்தஸங்கம்।
கேயூரஹாரமணிபிர்விவிதைர் விபூஷம்
சாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி।।

கண்டாவலக்ந துளஸீ நளினாக்ஷ மாலா—
காந்த்யாவலிப்த ப்ருதுபீந புஜாந்தராளம்।
ஸ்வர்ணாம்புஜாத வதநோல்லஸதூர்த்வ புண்ட்ரம்
சாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி।।

நாராயணாங்க்ரி ஜ்லஜத்வய ஸக்தசித்தம்
ராஜத்கிரீட மணிகுண்டல பூஷிதாங்கம்।
வால்மீகி முக்யமுனிபிர்ப்ருச வந்தநீயம்
சாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி।।

ஸ்ரீ வாசுதேவ சரணாம்புஜ ப்ருங்கராஜம்
காமாதிதோஷஹரணம் பரவிஷ்ணுரூபம்।
வைகநஸார்ச்சிதபதம் பரமம் பவித்ரம்
சாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி।।

சந்த்ராதித்ய ஸுலோசநம் மம குரும் க்ஷீராப்திகன்யாஸுதம்
ஸுத்ராநந்த ஸமந்த்ர தந்த்ர வித்யுஷாமக்ஞாநஜீவிச்சேதனம்।
தம் ஸாக்ஷாத்பரவாஸுதேவ சரணத்வம் த்வாம் புஜார்ச்சாபரம்
பக்தாநந்த குணப்ரதம் விகநஸம் நித்யம் ப்ரபத்யே விபும்।।

யேஷாமாஸீதாதி வைகாநஸாநாம்
ஜன்மக்ஷேத்ரம் நைமிசாரண்ய பூமி;।
தேவோ யேஷாம் தேவகீ புண்யராசி:
தேஷாம் பாதத்வத்வ பத்மம் ப்ரபத்யே।।

பவ்யாய மௌநிவர்யாய பரிபூதாய வாக்மிநே।
யோக ப்ரபா ஸமேதாய ஸ்ரீமத் விகநஸே நம:।।
லக்ஷ்மீ வல்லப ஸங்கல்ப வல்லபாய மஹாத்மநே।
ஸ்ரீமத் விகநஸே பூயாந்நித்ய ச்ரீர் நித்ய மங்களம்।।

With Best Compliments From



M.S. Trading Company

82, N.S.C. Bose Road,

MADRAS-79.

Dealing in

All Electrical Goods

ஸ்ரீ:

ஸ்ரீமத் விகனஸ அஷ்டோத்ர சத நாமாவளி :

ஓம் ஸ்ரீமதேயோக
ப்ரபாவக்ஞாய நம:
,, மந்த்ரவேத்ரே நம:
,, த்ரிலோகத்ருதே நம:
,, சரவணே சராவணே
சுக்ல ஸம்பூதாய நம:
,, கர்ப வைஷ்ணவாய நம:
,, ப்ருக்வாதிமுனிபுத்ராய
நம:
,, த்ரிலோகாத்மனே நம:
,, பராத்பராய நம:
,, பரஞ்ஜ்யோதி
ஸ்வரூபாய நம:
,, ஸர்வாத்மனே நம:
,, ஸர்வஸாஸ்த்ரப்ருதே
நம:
,, யோகிபுங்கவ ஸம்ஸ்
துத்ய ஸ்புடபாத ஸரோரு
ஹாய நம:
,, வேதாந்தவேத்ய
புருஷாய நம:
,, வேதாங்காய நம:
,, வேதசாரவிதே நம:
,, சூர்யேந்து நயந
த்வன்த்வாய நம:
,, ஸ்வயம்புவே நம:
,, ஆதி வைஷ்ணவாய நம:
,, ஆத்மலோகமந: பத்ம
ரஞ்ஜித ப்ரமராஹ்வயாய
நம:
,, ராஜீவலோசநாய நம:
,, சௌரிணே நம:
,, சுந்தராய நம:
,, புருஷோத்தமாய நம:
,, ஸமாராதன தீக்ஷாய நம:
,, ஸ்தாபகாய நம:
,, ஸ்தாநிகார்ச்சகாய நம:
,, ஆசார்யாய நம:
,, த்ரிஜகஜ்ஜேத்ரே நம:
,, ஜகன்னாதாய நம:
,, ஜனார்தநாய நம;

ஓம் சதகோடிஸஹஸ்ராம்ஸு
தேஜோவத்திவ்ய விக்ர
ஹாய நம;
,, போக்த்ரே நம:
,, கோப்த்ரே நம:
,, அமரேந்த்ராய நம:
,, ஸுமேதஸே நம:
,, ஓம் தர்மவர்த்மனே நம:
,, க்ஷேத்ரக்ஞாய நம:
,, புஷ்கராக்ஷாய நம:
,, ச்ரேஷ்டாய நம:
,, கம்பீர ஸத்குணாய நம:
,, ஜிதேந்த்ரியாய நம:
,, அப்ரமேய ப்ரகாசநாய
நம:
,, த்ருக்கராப்ஜாய நம:
,, ரமாபுத்ராய நம:
,, ம்ருகசர்மாம்பராய நம:
,, அச்யுதாய நம:
,, பத்மோத்பவாக்ரஜாய
நம:
,, முக்யாய நம:
,, த்ரிதண்டகமண்டலவே
நம:
,, வைகாநஸாகம நிதயே
நம:
,, நைகரூபாய நம:
,, நிரஞ்ஜனாய நம:
,, கர்பசக்ராங்கிததராய
நம:
,, சுசயே நம:
,, ஸாதவே நம:
,, ப்ரதாபநாய நம:
,, யோக ப்ரஹ்மணே நம:
,, பரப்ரஹ்மணே நம:
,, நிராமய தபோநிதயே
நம:
,, அநகாய நம:
,, பகவதே நம:
,, விஷ்ணவே நம:
,, விஜயாய நம:
,, நித்யசத்குணாய நம;
,, விராண்மாநஸ புத்ராய
நம:

ஓம் சக்ரசங்கதராய நம:
,, க்ரோதஹந்த்ரே நம:
,, சத்ருஹந்த்ரே நம:
,, அத்ருஸ்யாய நம:
,, ப்ரம்ஹரூபார்த்த வத்ஸ
லாய நம
,, காமஸம்ஹர்த்ரே நம:
,, தர்மப்ருதே நம:
,, தர்மிணே நம:
,, விசிஷ்டாய நம:
,, சாஸ்வதாய நம:
,, சிவாய நம:
,, அவ்யயாய நம:
,, ஸர்வதேவேசாய நம:
,, அசிந்த்யாய நம:
,, பயநாசநாய நம:
,, யோகீந்த்ராய நம:
,, யோகபுருஷாய நம:
,, ஆதிதேவாய நம:
,, மஹாத்மஜாய நம:
,, வைகாநஸமுனிச்ரேஷ்
டாய நம:
,, நிதிப்ருதே நம:
,, காஞ்சனாம்பராய நம:
,, நியமாய நம:
,, ஸாத்விக ஸ்ரீதாயமம:
,, தாரணாய நம:
,, சோகநாசநாய நம:
,, அர்ச்சநாக்ஷமயோகீ
ஸாய நம:
,, சுபாய நம:
,, மஹதே நம:
,, முக்திதாய நம:
,, பரமேகாந்தாய நம:
,, ஸ்ரீநிதயே நம:
,, ஸ்ரீகராய நம:
,, ருசயே நம:
,, ஸ்ரீதரார்ச்சிஷே நம:
,, சுகவ்யாப்தாய நம:
,, விகனஸாய நம:
,, விகநோமுனிபுங்கவாய
நம:
,, தயாளவே நம:
,, ஸத்யபாஷாய நம:
,, ஸுமூர்த்தயே நம:
,, திவ்யமூர்த்தயே நம:
ஸ்ரீ விகனஸ அஷ்டோத்தர
சதநாமாவளி: ஸம்பூர்ணம்

ஸ்ரீ :

ஸ்ரீமத் விகநஸ மஹாகுரவே நம:

ஸ்ரீவிகனஸாசார்ய திவ்ய ப்ரபந்தம்

தனியன்

திருவளருமார்பனார் மனத்தில் தோன்றி
செய்ய நான்மறைப் பொருளைத்தேர்ந்து வானில்
தருவளரு நைமிசாரண்யத்தில்
தபோநிதியாய் விகனஸெனும் தனிப்பேர்பெற்ற
உருவளரு முனிவரற்கு அந்தாதிமுற்ற
குருவளரு மைம்படையைச் சேனைக்கோவை
குருகை நாதனைப் பணிந்து கூறுவோமே.

அருளிறையாய் தவப்பயனாய் ஏம வைப்பாய்
ஆருயிராய்கண் மணியாய் அணைமாதாவாய்
இருள்மலம் நீக்குங்கதிராய் எமை வந்தாண்டே
இருநாலக்கர அமுதை இதையமாரப்
பருக அளித்தருள் பரத்துவாச கோத்ரப்
பாற்கடற்கோர் மதிபோல் வன்பாவுங் கோட்டி
திருநகர்வாழ் சௌம்மிய நாராயணனாரென்னும்
தேசிகனார் திருவடியைச் சிரமேற்கொள்வோம்.

சீர்கெழு மதிபோலிலங்கெழில் முகமும்
திருவருள் சுடர்விழி யிணையும்
ஏர்கெழு தீர்க்க புண்ட்ரநுதலும்
மின்நிகர் குண்டல முடியுமர்
தார்கெழு நான்கு புயங்களும் கர்ப்ப
சக்கிராங்கிதமும் நன்கமையும்
நீர்கெழு விகனாமுனி வரனிருதாள்
நெஞ்சினுளிருத்தி வாழ்த்துவமே. 1

வாழ்த்த நான் மறையாறங்கமாங்
காமவல்லிகள் படருவான் தருவே
பாழ்த்தமா மாயை படரிருளறுக்கும்
பரிதியே பைந்தொடியார் மால்
வீழ்த்தமா தவத்தோர் வியன் முடிமணியே
விளங்கு வைகானஸத் திறையே
ஆழ்தவென் பிறவிக்கடலை நீந்
துதற்குன்னடி யிணையெனுங் கலமருளே!! 2

அருள்நிறை மதுவையடியேன் மீ
தூற்றம் அரிய அம்போருகமலராய்
இருள்மல மகற்றும் எழில்மணி
விளக்காய் அருந்தவத்தோர் தனிமலையாழி

மருள்று மருந்தாங் வான்தருமமுதாய்
வயங்கு வைகானஸத் திறையே
அருள் கருங்குழார்காட் செய
தெனையுடன் தொழும்பார்க்கு தொழும்
பனாக்குவையே 3

ஆக்குதலளித் தலழிக்கு தலிவையே
யருள் விளையாட்டதால் புரிந்தும்
தாக்குதல் புரியும் ஐம்படைதரித்த
தடக்கைமால் மானஸத் தடத்தே
பூக்கு மா மலர்போல் வந்த புண்ணியனை
புனித வைகானஸத்திறையை
நீக்குமாறின்றி மகிதலத்திருந்தும்
நீமலனை நிகர்ப்பதார் நெஞ்சே !! 4

நெஞ்சமே விகனா முநிவரணடியை
நீ நினைந்துருகிலை சிரமத்தால்
கஞ்ச நாண்மலரைக் கடித்தொளி
செறிந்து கழலணித்திடு பதமலரைத்
தஞ்சமா மென்னப்பணித்திலை வாயால்
சாற்றிலையவன் புகழ்சரிதம்
அஞ்செலன்றுணையார் புரப்பவர்
அந்தோ அந்தகனணையுமப்போதே. 5

போதனத் துறையும் புனிதனும்
அறியாம் பொருளினை நைமிசவனத்தோர்
காதனத்திருந்தே யருளுமா மணியை
யரிய வைகானஸ வழுதை
மாதனத் தழுந்து நாரணனுவப்ப
வழங்கு வானெழிலியை மறந்தே
ஓதனச்சுவை மின்னார் நலச்சுவை கேட்டு
உறங்கினை யுணர்விலியுளமே. 6

உள்ளம் வல்லிரும்போ வுருகாதோ சிலையோ
உன்னை நினைந்து உருகிலாதென்றுங்
கள்ள முங்கொலையும் பொய்மையும் சினமும்
கலந்து நல்லொழுக்கமுந் தவமும்
தெள்ளருள் ஞானமும் சிறிதின்றித் தீவினை
மாதீர் மாலென்னும்
பள்ளம் வீழ்ந்துழலும் என் செய்கேன்
முனிவர் மணி விகனார்ய பார்க்கரனே !! 7

கரத்தினிற் தண்டுகமண்டலம் பரித்தே
காமனார் கருப்புவில்லுந்துஞ்
சரத்தினைப் பொருவுந்தடங்கணார் மாலாஞ்
சலதியை கடந்தருந் தவத்தோர்
சிரத்தினிற் பொலியுந் தெய்வவான் மணியே
திகழு வைகானஸத்திறையே
பரத்தினையருளும் பரமனார் சேயே
பாதகனை யாள்வதுன் பாரமே. 8

பரந்தருமமுதாய் பழமறைப் பொருளாய்
பார்கடலுறையும் தாரணனே
கரந்தரு ஞானமூத்திரை யபயம்
கமண்டலந் தண்டமும் பரித்தே
வரந்தருமெங்கள் விகனஸ குருவாய்
வற்கலையணிந்து வாளாரவின்
சிரந்தரு மணிபோல் வந்தனனென்றால்
செப்புவதார் கொல் சீர்த்தியையே !! 9

சீர்தியுற்றுலகும் சீர் குணமுடையீர்
செங்கண்மால் மானஸத்தெழுந்தே
ஆர்த்தியை முனிவர்க் காற்று மாரமுதா
யகைனா யெனையுமே யருட்கண்
பார்த்தியை தரத் தம்பதமலரீத்த
பரமனாய் விகனஸ குருவாய்
மூர்த்தியை முன்னித் துதித்திறைஞ்சிடுமின்
முன்னைதான் வினை செருக்கறவே!! 10

★

With Best Compliments From :

Goutham Enterprises

23, Veerappan Street,

MADRAS-79.

ப்ரார்த்தனா ஸூக்தம்

ப்ரியதாம் பகவான் விஷ்ணுஸ்ஸர்வதேவேச்வரோ ஹரி :।
ஸ்ரீவத்ஸாங்கஸ்ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ர சரணஸ்ததா ।।
ஜிதம்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விஸ்வபாவன ।
நமஸ்தேஸ்துஹ்ருஷீகேச மஹாபுருஷ பூர்வஜ ।।
பவந்து ஸர்வா: புண்யாஹ்யா நிமித்தா: சோபநான்விதா :।
த்வத்ப்ரஸாதாத் வயம் விஷ்ணோ ஸ்தவ தாஸாஸ்ஸமாகதா :।।
ஸாதயாமோ விமானம் தே ப்ரஸாதம் குரு நோ பவான்
ஸாஹாய்யம் ஸர்வ ப்ருத்யாஸ்தே குர்வந்து தவசாஸனாத் ।।
சாந்தவீசாரி பூதாதீன் விஸ்ருஜாஸ்மாபி ரேவது ।
அனபாயீ ப்ரயாத்வக்ரே சித்வாவிக்னம் புன: புன:।।
ப்ருஷ்டேச நந்தகோ யாது கதா வாமம் ஸுரக்ஷது।
சங்க சக்தீதரே பார்ச்வே யதேதாம் கார்ய ஸித்தயே ।।
சேஷா கச்சந்து சாஸ்மாபி: ப்ரஸாதாத் தவ ஸர்வச:।
த்வத்ப்ரஸாதாத் வயம் வீர கரிஷ்யாமோ க்ருஹம் தவ ।।
யதோ பலம்தஹ்யதே ஸுர்யாதநுஷ்ணமுஷ்ணத்வ மாச்ரிதம் ।
ததா வயம் ஹி த்வத்வீர்யாச் சுஸ்ரூஷாமனுபாலய ।।
அஸ்திசேத் கருணாத்வத்தச்சாஸ்மாகம் தாஸ கர்மணாம் ।
அனுமந்தா பவப்ரீதஸ்ஸர்வே யாசாமஹே வயம்
இந்த்ரச்சதக்ரதுர்வீரஸ் ஸர்வராஜஸ்ஸசீபதி: ।
ப்ரியதாம் பகவான் விஷ்ணுஸ் ஸர்வலோக சுபப்ரத :।।
அக்னிரக்ர்ய: பவித்ராணாம் தேவானாமக்ரகோ ஹரி:।
ப்ரியதாம் பகவான் விஷ்ணுஸ்ஸர்வ போக்தாசுகாவஹ:।।
ஸர்வலோகோத்பவோ விஷ்ணுர்யமோ யமகரப்ரஜா :।
ப்ரியதாம் தண்டப்ருன்னேதா தர்மாத்மா தர்ம பாலக:।।
ப்ரஜாரக்ஷன்வினிக்னன்வை யாது தானா நஜப்ரபு:।
நிர்ருதி ப்ரியதாம் நீலோ நீலோத்பலதல ப்ரபு;।।
வருண: ப்ரசேதா பகவான் விக்ரமீ யக்ஞ பாலக:।
ரக்தாம்பரதரோ வீர: ப்ரியதாம் ப்ரபுரவ்யய :।।
வாயுஸ் ஸர்வாத்மகோ பத்ர உதானோ ஜவனோ மருத் ।
ப்ரியதாம் பகவான் ப்ராணஸ்ஸசீபதி ஸகாப்ரபு :।।
ராஜ ராஜோ தனாத்யக்ஷ: குபேரோ விச்ரவஸ்ஸுத:।
ப்ரியதாம் நிதிஸம்யுக்தா ஈஸ்வரஸ்ய ஸகா ப்ரபு :।।
ஈசஸ்த்ரிலோசநஸ்ஸுலீ வ்ருஷபத்வஜ வாஹன :।
ப்ரியதாம் கணப்ருன்னித்யம் த்ர்யம்பகோம்பர ஸன்னிப:।।
ப்ரஹ்மா பிதாமஹோ வீரோ வேதவக்தா வ்ருஷாகபி:।
ப்ரியதாம் பத்மகர்பாபோ விஷ்ணுபுத்ரோ விராட்ஸ்வராட் ।।
திங்நாகா நாக ஸங்காச்ச ஸர்வாச்சாந்தர தேவதா:
ரவ்யாதயோ க்ரஹா பூதா ரிஷயஸ்ஸித்தசாரணா:।।
ப்ரியதாம் கண ஸம்யுக்தா குர்வந்து ச ஸஹாயதாம் ।।

ஸ்ரீமத் விகநஸாசார்யர் ஸுப்ரபாதம்

ஹரிர்ஹரிர்ஹரிர்ஹரிர்ஹரிர்ஹரிர் ஹரி:

உத்திஷ்டோத்திஷ்ட விஷ்ணவர்ச்சா சாஸ்த்ரதான ப்ரபாகர!
ரமாபதிதநூஜாதா பாலயாஸ்மான் முநீச்வர :||

ப்ராசீபாகமலங்கரோதி தினக்ருத் காடாந்தகாரோ கதா :!
மல்லீசாப்த சம்பகாதி குஸுமா சம்புல்லதாம்போதிரே ||

விப்ரா வேத பராயணா ஸுமதராம் த்வாமர்ச்சிதும் கதா :!
பேரீ சப்த முபைதி விஷ்ணுபதவீம் உத்திஷ்ட வைகாநஸா :||

அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாராமண்டோதரீ ஸுதா !
பஞ்சகன்யாஸ்மரேன்நித்யம் மஹாபாதக நாஸநம் ||

மங்களம்

ஸசங்கசக்ர மண்டிதஸ்ய சாருகுண்டலம்பிதம்
ஸசந்த்ரிஹாஸ ஹஸ்தமந்த்ர தந்த்ர தத்வவித் !
ஸசக்ரபாணி மாநஸோத்பவஸ்புரத் கிரீடப்ருத்
விகனஸாசார்ய தேசிகத்வ மேதனோது மங்களம் !!

ஸ்ரீ விகநஸாசார்ய மங்களாசாஸநம்

லக்ஷ்மீ வல்லப ஸங்கல்ப வல்லபாய மஹாத்மநே
ஸ்ரீமத் விகநஸே துப்யம் முநிவர்யாய மங்களம் ||
லக்ஷ்ம்யா மாத்ருமதே தஸ்யா : பத்யா பித்ருமதேநகை :
ப்ருக்வாத்யை : புத்ரிணேஸ்மாகம் ஸூத்ரகாராய மங்களம் !'
ஸ்வஸூத்ர விஹிதோத்க்ருஷ்ட விஷ்ணு பல்யாக்யகர்மணா
கர்பவைஷ்ணவதா ஸித்தி க்யாபகாயாஸ்து மங்களம் ||
பக்த்யா பகவத: பூஜாம் முக்த்யுபாயம் ச்ருதீரிதம்
ஸ்வயம் தர்சயதேஸ்மாகம் ஸூத்ரகாராய மங்களம் ||
ஸ்ரீவேங்கடேசகருணா ப்ரவேசாக்ர புவே ஸதா
கருணாநிதயேஸ்மாகம் குரவே தேஸ்து மங்களம் ||
விஷ்ணோ: பரத்வகதனபூர்வ மர்ச்சா விதாயினே
ஸ்ரீமத் விகநஸே நித்யம் குரவே தேஸ்து மங்களம் ||
நாராயண பரம் ஸூத்ரம் ச்ருதிவாக்யைக ஸம்ச்ரயம்
ப்ரகாஸ்ய ஸூத்ரகாராணாம் த்ருஷதே மூர்த்நி மங்களம் ||
ஆத்மநோ முநிராஜத்வ ஸூசநாய ச மூர்தநி
கிரீடதாரிணே பாபஹாரிணே தேஸ்து மங்களம் ||
ஜந்மந்யேவ ஸ்வபுஜயோர்த்வயோ ஸ்ஸங்காரிதாரிணே
வரதாபய ஹஸ்தாய முநிராஜாய மங்களம் ||
யோகநிஷ்ட ப்ரபா யுக்த ஸ்வரூப ப்ரதிபாநவே
குரவே விகநோ நாம்நா விஷ்ணுபுத்ராய மங்களம் ||

With Best Compliments From

M/s. Sri Sudarsan Enterprises

30-A, Sembudoss Street,

Madras-600001.

Dealers in : Iron & Steel & M.S. Scrap.

Phone : 5221486

Associate Concerns :

M/s. Industrial Sales & Services

Dealers in Iron & Steel & M.S. Scrap.

Galvanizing Works at

No. 4/1 & 5/1, Puliyembedu Village,

Velappanchavadi Post, Thiruverkadu Township,

Madras-77.

Phone : 5221438

M/s. Silver Steels

Tamilnadu Agent for :

M/s. Pennar Steels Ltd, Hyderabad.

Manufacturers : C.R. Sheet Strips in coils length in various gauges

M/s Abhishek Steels Ltd.

M/s Gautham Rolling Mills (P) Ltd.

Manufacturers :

M.S. Channels, M.S. Angles and CTD Bars etc.

Phone : 510116

M/s Front Line Bulbs & Tubes (P) Ltd.

N.P. 17, Sidco Industrial Estate,

Ekkaduthangal, MADRAS-97.

Manufacturers of GLS Bulbs from 15 W to 100 W.

Phone : Office : 4822983

Srimathe Vedantha Ramanuja Maha Desikaya Namaha

With Best Compliments From



Gram : SUDARMA

Phone : 589168
845251

A. S. V. VARADHACHARI & CO.

No. 11, Audiappa Naicken Street,

MADRAS-600 001.

With Best Compliments From

Estd. 1946 Phone : 585126, 585369

SHA BHIMRAJ SHANKER LAL

Stockist of : Camel Chains & Kundan Chains

Dealers in :

Chains, Finger Rings, Golusu, Lockets, Glass Beads and Immitation Jewellery

59, Perumal Mudali Street,

Madras-79.

With Best Compliments From

Phone : 584849 p.p.

Maha Shakti Fancy Store

Dealers in Fancy Goods, Immitation Jewellery, Plastic Bangals, Kum-Kum, Fancy Clip, Hair Pins, Ribbon, Kajal, Nail Polish, She-n-She Bindi etc.

36, Perumal Mudali Street,

Madras-79.

Prop. : Chhelsingh

With Best Compliments From

SRI SOWRI PHARMA

86/1, South Street,

Karur-639 001.

Trichy District (TN)

With Best Compliments From

M/s. SUNRISE TEXTILES

Weaving Factory,

Sengunthapuram 7th Cross'

Karur-639 002.

Trichy District (TN)

ஸ்ரீ:

சாற்று மறை

ஸர்வதேச தசாகாலேஷ்வ வ்யாஹத பராக்ரம ।
வைகாநஸார்ய திவ்யாக்ஞா வர்த்ததாம்பி வர்த்ததாம் ॥
வைகாநஸார்ய திவ்யாக்ஞா ப்ரதிவாஸர முஜ்வல
திகந்தவ்யாபிநீபூயாத் ஸாஹிலோக ஹிதைஷிணீ ॥
ஸ்ரீவேங்கடேசச்ரிய மநுபத்ர வாமநுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமத் வைஷ்ணவச்ரிய மநுபத்ரவாமநுதினம் ஸம்வர்த்தய ॥
நமோ வைகாநஸார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே
ரமாபதி கநூஜாயா ஸ்த்வசச்சா சாஸ்த்ர ப்ரதாயிநே ॥
தேவராஜ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
ப்ருக்வாதி முனிபிர்மாந்யம் வந்தே ஸ்ரீவிகனோ முநிம் ॥

(வாழி திருநாமம்)

வாழி திருமார்பன் மாமனத்தில் வந்துதித்த
வாழி விகநாமுனிவன் மாநிலத்தில்-ஆழியவன்
தூயவருளால் தந்த சூத்திரத்தினால் செய்த
மாயனடி யர்ச்சிப்பார் மதம்.
திருமார்பன் மனத்தெழுந்து திகழுமவன் வாழியே
திருவாராதனை விதியை செப்பினான் வாழியே
தருவார்ந்த நைமிசாரத்துதித்தான் வாழியே
தாரணியில் வைஷ்ணவத்வம் தழைக்க வந்தோன் வாழியே
மரூவார்ந்த துளவமணியணிமார்பன் வாழியே
மரீசி முதன் முனிவர்கட்கு மனுவளித்தோன் வாழியே
குருவாகி முக்திநெறி கூறினன் வாழியே
கோதில் விகநாரியனார் குவலயத்தில் வாழியே
நாரணன்றாள் வாழ்க-நறியமலராள் வாழ்க
ஆரணங்கள் வாழ்க-அறம் வாழ்க
தாரணியில் மன்னுமடியார் வாழ்க
வாழி விகநோமுனிவன் இன்னுமொரு கற்பாண்டிரும்.

சீரார்ந்த செங்கமலத் திருவடிகள் வாழியே
திருவறையில் சாத்திய செம்பொன்னுடை வாழியே
தாரார்ந்து நூலணிந்த தடமார்பும் வாழியே
தனிவரை போலிலங்குந்திருத்தடத் தோள்கள் வாழியே

ஏரார்ந்த நிலமதிபோலிலங்கு முகம் வாழியே
என்றுமருள் பொழியும் இருதிரு விழிகள் வாழியே
நீரார்ந்த மணியொளியை நிகர்வடிவம் வாழியே
நிமல விகநாரியனார் நீடூழி வாழியே
ஆவணியில் திருவோனத்தவதரித்தோன் வாழியே
அத்ரிப்ருகு காஸ்யபர்களின் கருத்தறிந்தோன் வாழியே
நைமிசாரண்யத்தில் வீற்றிருந்தோன் வாழியே
நான்முகனும் நாரதரும் பணியவந்தோன் வாழியே
ஏஞ்ஞிலாசிஷ்யருக்கெடுத்துரைத்தோன் வாழியே

தண்டமொடு கமண்டலமும் தாங்கியிருந்தோன் வாழியே
வண்துளப மார்பனைப்போல் விளங்க வந்தோன் வாழியே
எங்கும் நாராயணனென்று ஏற்றிவைத்தோன் வாழியே
சங்கொடு சக்கரமும் தரித்திருந்தோன்வாழியே
எங்கள் விகநஸ மஹாமுனி இருநற் பதங்கள் வாழியே !

திருநாள் பாட்டு

பங்கயமங்கையணிந்திடு மார்பன் பரிந்து மகிழ்ந்திடுநாள் !
பல்கிளை நங்குலர் வேதியர் நான்மறை பள்ளி இறைஞ்சிடு நாள் !

கொங்கலர் நைமிசமா வனமாதவர் கூர்வுணர் வுற்றிடு நாள் !
கோதில் வைகாநஸ மந்திர விதியே விதியென்று குறித்திடு நாள் !

பொங்கு தரங்க நெடுங்கடல் சூழ்புவி புண்ணியமோங்கிடு நாள் !
புன்சமயத்தவர் வர்த்தமொழிந்து புகழ்ந்து மிறைஞ்சிடு நாள் !

மங்கள விகனஸதேசிகன் மேதினி மன்னியுதித்திடு நாள் !
மதிநிறை பூரணையாவணி யிற்றிருவோணத் திருநாளே ! !

-மங்களானி பவந்து-

With Best Compliments From :

Sri K. R. Arumugam

SANTHI & Co.,

7th Cross Senguntha Puram
KARUR

With Best Compliments From



CHAKRA
MATERNITY
CLINIC

108, Ellaiamman Koil Street,
West Mambalam,
MADRAS-33

ஸ்ரீ:

ஸ்ரீமத் விகநஸமஹாகுரவே நம:

ஸ்ரீவைகாநஸம்

கடுக்கலூர் ஸ்ரீ. உ. வே, ஸ்தலசயன பட்டாச்சாரியர்

வ்யாகரண சிரோமணி, ஸ்ரீவைகாநஸ ஆகமவித்வான்

நாராயணம் ஸகமலம் ஸகலாமரேந்த்ரம்
வைகாநஸம் மமகுரும் நிகமாகமேந்த்ரம்!
ப்ருக்வத்ரிகாஸ்யபமரீசிமுகான் முனீந்த்
ரான்
சர்வானஹம்குலகுரூன் ப்ரணமாமி
மூர்த்னா !!

ஸ்ரீயப் பதியான ஸ்ரீமன் நாராயணனை ஆலயங்களில் ஆராதிக்கும் முறைகளுக்கு ஆகமம் என்று பெயர். ஸ்ரீவைகானஸத்தை ஸௌம்யம் என்று சொல்லுவார்கள். ஸௌம்யம் என்றால் சத்வகுணம் நிறைந்து சாந்தி நிலையை ஏற்படுத்தும். ஆக்னேயம் என்பது தனிமையான நிலையை மட்டும் கொடுக்கக் கூடியது. ஆகையால் நகரங்கள், கிராமங்கள், ஜனசஞ்சாரங்கள் உள்ள இடங்களில் ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி பூஜிப்பதுதான் முக்கியம். ஏனெனில், இந்த லோகத்திலும் பரலோகத்தில் நல்ல நிலையை ஏற்படுத்துமென்பதால் ''இஹலோகே சிரமனுபூய தேஹாவசானே... ப்ரஞ்ஜோதிப்ரவிசதி இதி''

ஸ்ரீமந் நாராயணன் பூலோகத்தில் அர்ச்சாரூபியாக அவதாரம் செய்ய சங்கல்பித்துக் கொண்டு அவ்வமயம் தன்னை அர்ச்சிப்பதற்கு தகுந்தவர்களை ஆராய்ந்தார். மற்ற தேவர்கள் பற்பல காரணங்களால் தாங்களாகவே தகுதியற்றவர்கள் என்று பூலோகத்தில் பகவானை ஆராதிக்க சக்தியற்றவர்கள் என்ற படியால் ஸ்ரீயப்பதியானவன் பூலோகத்தில் அவதாரம் செய்ய வேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருக்கும் தருவாயில் அவருடைய மானசிக புத்ரனாக தானாகவே விகஸனர் தோன்றினார். விகஸனர் என்பதற்கு இரண்டு விதமாக பொருள் உண்டு. ''விசேஷேனகனனாத்'' தீவிரமாக ஆலோசனை செய்யும்போது தோன்றியதால் விகனஸர். ''யேநகா: தேவைகானஸா:'' என்பதால் நகத்தினால் ஸ்ரீமந்நாராயணன் தனது ஹ்ருதயத்தை கீரியதனாலேயே அதிலிருந்து தோன்றியதால் விகநஸர் என்று பொருள் ஏற்பட்டது. அப்படி தோன்றிய ஸ்ரீவிகநஸருக்கு சாவித்திரி முதலான மந்த்ரங்களையும் வேதங்களையும் உபதேசம் செய்து என்னை முறைப்படி பூலோகத்தில் ஆராதனை செய்வாயாக என்று கட்டளையிட்டார். அப்போது ஸ்ரீவிகநஸர் நாராயணனிடத்தில் தங்களை அர்ச்சிக்கும் போது ஏற்படும் கணக்கற்ற தோஷங்களை க்ஷமித்து அனுக்ரஹிக்க வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தார். அதன் பின்பு சிலகாலங்களில் ப்ரஹ்மாவிற்கு வேதங்கள் மறந்துபோனபடியாலே அதை மறுபடியும் நான்முகனுக்கு ஸ்ரீமந்நாராயணன் உபதேசம் செய்து வைத்தார். ''தைத்யாபனீதான் தயயைவபூயோSபி அத்யாபயிஷ்ய: நிகமான் த சேத்வம்'' ஆதலால் உபதேசக்ரமத்திலே ஸ்ரீவிகநஸர் முதலாவதாக கருதப்படுகின்றபடியால் ப்ரஹ்மாவிற்கும் மூத்தவராகின்றார் ''பத்மோத்பவஸ்யாக்ரஜம்'' வேதங்கள் முதலான எல்லாவற்றையும் அத்யாபனம் செய்ய ஸ்ரீவிகநஸர் ச்ராவணமாதம், ச்ரவண நக்ஷத்திரத்தில், பௌர்ணமி திதியில், திங்கட்கிழமையில் நைமிசாரண்யத்தில் அவதரித்தார்.

அங்கிருந்த அத்ரிமுதலான சிஷ்யர்களுக்கு ஸ்ரீவைகாநஸ சூத்ரங்களையும் மந்த்ரங்களையும் அத்யயனம் செய்து வைத்தார். அந்த சூத்திரத்தின்படி முறைப்படி சமஸ்காரங்களை பெற்றவர்கள் ஸ்ரீவைகானஸர்களாக கருதப்படுகின்றனர், ''யேஷாமாத்யம் வைஷ்ணவம் ச்ருஷ்ட்டிராத்யா ... தேஷாம்விப்ரச்ரேஷ்டவை கானஸானாம்.'' ஆதலால முதன் முதலில் வைஷ்ணவமானது ஸ்ரீவைகாநஸர்களுக்குத் தான் ஏற்பட்டது. ஆதலால் தான் வைகாநஸர்களுக்கு வைஷ்ணவ மந்த்ரம் என்று சொல்லப்படும் ''அதோதேவா'' என்ற ஆறு ருக்குகள் கொண்ட மந்த்ரம் ப்ரதானமாகும்.

இவ்வாறு வைஷ்ணவ மந்த்ரத்தையே சம்ஸ்காரங்களுக்கு ப்ரதானமாக கொண்டுள்ள படியால் கர்பவைஷ்ணவத்வம் அவர்களுக்கு சித்திக்கின்றது.

ஸ்ரீவைகாநஸ சூத்ரவிதிப்படி வைகானஸர்களுக்கு மானுஷீக ஸமஸ்காரங்கள் பதினெட்டு ''ருது ஸங்கமன, கர்பாதான, பும்ஸவன, சீமந்த விஷ்ணுபலி, ஜாதகர்ம, உத்தான, நாமகரண, அன்னப்ராசன, ப்ரவாசாகமன, பிண்டவர்த்தன, சௌள, உபநயன, பாராயண வ்ரதபந்தவி சர்க, உபாகர்ம, சமாவர்த்தன, பாணிக் ரஹண.''

1. விவாஹமானவுடன் சதுர்த்தீவாஸ: என்று குறிப்பிடுவதுதான் நிஷேகம் என்ற சம்ஸ்காரம்.

2. ஆலம்முக்கு, பேத்திமுக்கு, பால் ஆகியவற்றை அரைத்து அந்த ரசத்தை பெண்ணினுடைய வலது மூக்கிலும் இடது மூக்கிலும் சில துளிகள் பிழிய வேண்டும். அதில் வலது மூக்கில் பிழிவதால் புத்ரனும், இடது மூக்கில் பிழிவதால் பெண்ணும் பிறக்கும். இதையே ருது சங்கமனம் என்ற சம்ஸ்காரமென்கின்றோம்.

3. கர்பம்தரிக்கும் காலத்தில் விஷ்ணு சூக்தத்தினால் மனைவியினுடைய சரீரத்தை தொட்டு ஜபிப்பது கர்பாதான சம்ஸ்காரமாகும். (இதனாலும் அந்த பெண்ணிற்கு பிறக்கும் குழந்தைகளுக்கு கர்பவைஷ்ணவத்வம் சித்திக்கின்றது)

4. கர்ப்பம் தரித்த ஏழாவது மாதத்தில் பால், தயிர், நெய் ஆகியவற்றை சமஅளவு எடுத்து சாப்பிடும்படி செய்வது பும்ஸவனம் என்ற சம்ஸ்காரமாகும்.

5. கர்ப்பம் தரித்த எட்டாவது மாதத்தில் பெண்ணின் தலையில் (மூன்று இடங்களில் வெள்ளை நிறத்துடன் கூடிய) பன்றி முள்ளால் நேர்வகுடு எடுப்பது சீமந்தமென்ற சம்ஸ்காரமாகும்.

6. கருத்தரித்த பெண்ணின் கர்பலக்ஷணத்திற்காகவும், வைஷ்ணவத்வசித்திக்காகவும் பகவானை த்வாதசநாமங்களினால் அர்ச்சித்து பாயசான்னத்தால் ஹோமம் செய்து மீத முள்ள பாயசத்தை சாப்பிடும்படி செய்வது விஷ்ணுபலி என்ற சம்ஸ்காரமாகும்.

7. குழத்தை பிறந்தவுடன் கர்பத்தி லிருந்த தோஷநிவ்ருத்திக்கு ஹோமம் செய்வது ஜாதகர்மா என்ற சம்ஸ்காரமாகும்.

8. குழந்தை கவிழ்ந்து கொள்ளும் சமயத்தில் செய்யப்படும் சம்ஸ்காரம் உத்தானமென்பதாகும்.

9. குழந்தை பிறந்த நாற்பதாவது அல்லது ஐம்பதாவது நாட்களில் செய்யப்படும் சம்ஸ்காரம் நாமகரணமாகும்.

10. குழந்தை பிறந்த எட்டாவது மாதமோ அல்லது வருடமுடிவிலோ பாயசான்னத்தை குழந்தைக்கு கொடுப்பது அன்னப்ராசனமென்பதாகும்.

11. குழந்தைக்கு ஒரு வயது ஆகும்போது குஹனுடைய ஆலயத்துக்கு சென்று வருவது ப்ரவாசாகமனமென்ற சம்ஸ்காரமாகும்.

12. பஞ்ச சம்ஸ்காரங்களில் தாபம் என்ற சம்ஸ்காரம் கர்ப்பத்திலும், புண்ட்ரம், நாம என்ற இரண்டும் நாம கரணத்திலும் வைகானஸர்கள் செய்து கொள்கிறபடியால் வைஷ்ணவனாகிய அக்குழந்தையோடு ஜ்ஞாதிகள் சேர்ந்து போஜனம் செய்வது பிண்டவர்த்தன சம்ஸ்காரமென்பதாகும்.

13. சௌளமென்பது குழந்தைக்கு பிறந்த ஒன்றாவது அல்லது மூன்றாவது வருடத்தில் சிகை வைக்கும் சம்ஸ்காரமாகும்.

14. குழந்தையினுடைய ஐந்து, ஏழு ஒன்பது ஆகிய வயதில் செய்யப்படும் சம்ஸ்காரம் உபநயனமென்பதாகும்.

15. பாராயணவ்ரதபந்தோவிசர்க கர்மாவிற்கு முன்னதாக உபாகர்மா என்ற சம்ஸ்காரம் செய்யப்படவேண்டுமென்பதால் ஆஷாடோபாகர்மா என்று சொல்லப்படுகின்றது. உபாகர்மா சுக்லபக்ஷத்தில் அனத்யயனம் இல்லாத புதன்கிழமையில் நல்ல திதியில் ஆரம்பிக்கப்படும் ஸம்ஸ்காரமாகும்.

16. மேலே குறிப்பிட்ட உபாகர்மாவிலேயே வேதாரம்பமும், அஷ்டாக்ஷரமந்த்ரங்களும் அடங்கும் (இந்த சம்ஸ்காரம் முடிந்தவுடனேயே ஸ்ரீவைகாநஸன் பகவதாராதனம்

செய்ய அருகதை உடையவனாகின்றான்)'' தாபம் புண்ட்ரம் ததா நாம மந்த்ரோ யக்ஞச்ச பஞ்சம:|| வ்ரதபந்த விசர்கமென்பது ஆக்னோ யாதிவ்ரத பந்தங்கள் செய்து கடைசியில் சுக்ரிய விரதம் செய்து விரதத்தை முடிக்க வேண்டும்.

17. சமாவர்த்தனமென்பது அத்யயனம் முடிந்த பின்பு க்ருஹஸ்தாஸ்ரமத்திற்கு தகுதி யுள்ளவனாக்குவது அப்போது அவன் ஸ்னாத கன் எனப்படுகின்றான்.

18. பெண்ணினுடைய வலதுகையை (ஐந்து விரல்களையும்) மந்த்ர புரஸ்ஸரமாக பிடிப்பது பாணிக்ரஹணமென்ற சம்ஸ்கார மாகும். (விவாஹம்)

இவை அனைத்திற்கும் ஸ்ரீ வைகாநஸ மந்த்ரப்ரஸ்னத்தில் கூறியபடி மந்த்ரங்களி னால் ஹோமம் செய்வது மிகவும் முக்கியம்.

இவ்வளவு பெருமை கொண்டஆகமம் ஸ்ரீமந் நாராயணன் தன்னுடைய மானசிக ஔரச புத்ரனான விகநஸ மஹரிஷியைக் கொண்டு தன்னுடைய ஆராதனத்தை தன்னையே பல மாக்கிக்கொண்டுதானே நடத்திக்கொண்டான். ''ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரயதி/ காரிதவான்'' ஸ்ரீவைகானஸ சூத்ரம் ஆதியா னது, பூர்ணமானது. ஆதலால் ''அனுக்தம் அன்யதோ க்ராஹ்யம்'' என்ற வாக்சியத்தின் படி மற்ற சூத்ரங்களைப் போல் வேறு சூத்ரத்தி லிருந்து எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஸ்ரீவைகானஸர்களுக்கு கிடையாது. இப்படிப் பட்ட ஸ்ரீவைகானஸ அர்ச்சகர்கள் ஸ்ரீவைகா நஸ திவ்யபகவத் சாஸ்த்ர முறைப்படி ஆங் காங்கே பகவானுடைய அர்ச்சாமூர்த்தியை ப்ரதிஷ்டைசெய்து அர்ச்சித்து வருகின்றார்கள். குறிப்பாக ஸ்ரீவைகானஸ ஆகமமுறைப்படி திருப்பதி, திருக்கோவிலூர், திருமாலிருஞ் சோலை, திருவஹீந்திபுரம், திருவல்லிக்கேணி திருக்கடல்மலை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய திவ்ய தேசங்களில் ஸ்ரீமந்நாராயணனை அர்ச்சித்து வருகின்றார்கள்.

லக்ஷ்மீவல்லபசங்கல்ப வல்லபாய
மஹாத்மனே !
ஸ்ரீமத்விகநஸேபூயாத் நித்யஸ்ரீர்நித்ய
மங்களம் ! !

With Best Compliments From :



Sri. A. P. SATHASIVAM

Vaiyapuri Nagar
KARUR

With Best Compliments From



Lakshmi Raghav Investments

Plot No. 27, IInd Main Road,
Ram Nagar, Nanganallur,
Madras-61.

With Best Compliments From

MARUTHI FINANCIAL SERVICES

25, Thirumalai Pillai Road,
T. Nagar, Madras-600017.

த்வாதச மாஸார்ச்சனம்

N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியர்
(சின்னமுறை அர்ச்சகம், திருவல்லிக்கேணி)

'மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்' என்பது ஸ்ரீக்ருஷ்ண பகவான் திருவாக்கு. அதுபோல பகவன் மரீசி மஹர்ஷியும், ஆனந்த ஸம்ஹிதை ஸ்ரீவிமானார்ச்சனா கல்பத்தில் மார்கழி முதலாகவே 12 மாஸங்களின் விசேஷ அர்ச்சன விதானங்களை அருளிச்செய்கிறார். மாதத்தின் இரு ஏகாதசிகள், அமாவாஸ்யை, பௌர்ணமி, மற்றும் சிரவணம் ஆகிய விஷ்ணு பஞ்சதினங்கள், ரவிஸங்க்ரமண காலம், விஷ்ணு கிரஹணம் மற்றும் புண்யதினம், ராஜ்யத்தின் விசேஷ தினங்களில் விசேஷ பூஜைகளை செய்யவேண்டும்.

அன்னாளன்று, ஆலயம் எங்கும் சுத்தி செய்து கோலம் போட்டு ஆலயத்தை விதானம் கொடி, தர்பமாலைகளால் அலங்கரித்து ஆலயத்வாரங்களில் தோரணம், வாழை, பாக்குமரம் பூர்ண கும்பங்களால் அலங்கரித்து, கிராம (நகர) வீதிகளை சுத்தி செய்து அலங்கரித்து, காலை, திருவாராதனம் ஆனபின் உத்ஸவருக்கு நைமித்திக திருவாராதனம் செய்து, அக்னி குண்டத்தில் நெய்யால் திதிவார நக்ஷத்ராதிதைவத்யம், பஞ்சஸூக்தம் மூர்த்தி ஹோமம் செய்து கிராம வீதிகளில் பலிநிர்வாபனம் செய்து திருவீதி உத்ஸவமும் செய்து ஆஸ்தான மண்டபத்தில் (அல்) கர்பக்ருஹத்தில் 2 மரக்கால் (16படி) அன்னப்ரஸாதம் உபதம்சங்களோடு நிவேதனம் செய்ய வேண்டும்.

கீழ்க்காணும் மாதங்களில் அந்தந்த கைங்கர்யங்கள் மாத முழுவதும் நித்யம் செய்வதால் வருட முழுதும் அக்கைங்கர்யம் செய்த பலன் பக்தனுக்கு கிடைக்கிறது. அந்தந்த காலங்களில் உண்டாகும் புஷ்பங்கள், பழங்களை பகவானுக்கு அர்ப்பணிப்பது மிகவும் முக்யம்-மார்கழி-சர்க்கரைப் பொங்கல் அல்லது பொங்கலாவது. இம்மாதத்தில் செய்யும் அர்ச்சனையே அவ்வருஷத் திருவாராதன தோஷங்கள் போக்குவதாகும்.

தை-பசும்பால்; மாசி-அகில், சந்தனக் கட்டை முதலான தூபத்ரவ்யங்கள்; பங்குனி-சந்தனாதி கந்தம்; சித்திரை-ஸுகந்த புஷ்பங்களால் மாலைகள், மா, பலா, வாழை; வைகாசி-வெட்டிவேர் முதலானவை சேர்ந்த நதீ, தடாகாதி தீர்த்தம்; ஆனி-ஸ்நபனத்திற்கு வாசனைத் திரவியங்கள், வெண்பட்டு, நார்மடி, பருத்தி, குடை, விசிறி, சாமரம் செய்தல்; ஆடி-எட்டுவிதமான த்ரவ்யங்களோடு (தர்ப்பம், அக்ஷதை, எள், நெல், உளுந்து, திப்பிலி, வெள்ளைக்கடுகு, யவம்) கூடிய அர்க்யம்; ஆவணி-பசும்நெய், தயிர்; புரட்டாசி-பக்ஷணங்கள், அபூபங்கள்; ஐப்பசி-முகவாஸம் (தாம்பூலம்); கார்த்திகை-தீபத்ரவ்யங்கள் ஸமர்பிக்க வேண்டும்.

ஸ்ரீவிகனாஸாசார்யரின் சிஷ்யர்களானப்புகு, அத்ரி, மரீசி, கசியபர் ஆகிய 4 ரிஷிகளாலும் கீழ்காணும் தினங்கள் விசேஷமாக கொண்டாடப்படும் முறை அருளிச்செய்யப்பட்டது. முக்கோடி துவாதசி, தைப்பூசம், மாக சுக்ல பஞ்சமி பங்குனி உத்தரம், ஸ்ரீராமநவமி, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், வைகாசி ரேவதீ, ஆனி மூலம், ஆடிபௌர்ணமி, ஆவணி சிரவணம், க்ருஷ்ணாஷ்டமி, புரட்டாசி சிரவண துவாதசி, ஐப்பசி அசுவினி, கார்த்திகை பௌர்ணமி தீபோத்ஸவம் ஆகிய தினங்களில் விசேஷ ஆராதனம் செய்யவேண்டும்.

ஸ்ரீ சாஸ்த்ர வைசிஷ்ட்யம்

தேவோர்ச்சக பராதீனஸ்ஸதயோ
பக்தவத்ஸல :
அர்ச்சகாநுக்ரஹார்த்தாய பஞ்ஜராந்தஸ்த
சாரிகா ।

விசேஷ பக்தி ஹேதுத்வாத்
ப்ரதிமாராதனம் பரம்
அர்ச்சாவதாரஸ்ஸர்வேஷாம் பாந்தவோ
பக்தவத்ஸல :॥

என்று ஸ்ரீகேசவாசாரியர் ஸ்ரீய-பதியின் பக்தவால்லப்யத்தை ''அர்ச்சுனா நவனீத''த்திலே அனுபவிக்கிறார். ஸ்ரீமந் நாராயணன் அர்ச்சக பராதீனன்; அர்ச்சாவதார ரூபியாய் கூண்டிலிருந்து கொண்டே எல்லோரையும்

மகிழ்வுறச் செய்யும் கிளி போல ப்ரதிமையிலே ஆராத்யனாய் ஸகலருக்கும் பந்துவாய் அர்ச்சகாள் முதலாய் ஸர்வருக்கும் அனுக்ரஹிக்கிறார்.

எம்பெருமானிடம் பக்தி கொள்வதானது அனைவருக்கும் உண்டாவதில்லை. பகவத் ப்ருகு மஹர்ஷி வசநத்தாலே, ''அனேக ஜந்மஸு அப்யாஸாத் விஷ்ணோர் பக்தி: ப்ரஜாயதே'' என்பதாக, அனேக ஜன்மங்களெடுத்து ஹரி பக்தி செய்யும் விருப்பத்தாலே எம்பெருமானிடம் பக்தி உண்டாகிறது. எவர்கள் இம்ராதிரி பக்தி உடையவரோ அவர்களே க்ருதார்த்தர்கள். எம்பெருமான் பஞ்சபேர விதானத்தில் எழுந்தருளியிருக்கும் போது, ஸ்ரீகிலாதிகார வசநத்தாலே. த்ருவம் துக்ராம ரக்ஷார்த்தம்...மூலவர் தான் எழுந்தருளியுள்ள ஊரின் அனைத்து யோகக்ஷேமங்களையும் ரக்ஷிக்கிறார். கௌதுக மூர்த்தி அர்ச்சை, திருவாராதனம், சயநம் ஆகியவை கண்டருள்கிறார். உத்ஸவ மூர்த்தி கிராம (நகர) வீதிகளுக்கு எழுந்தருளி ஜனங்களிடம் நேரிலேயே ஏள்ளி அனுக்ரஹிக்கிறார். ஸ்நபந மூர்த்தி நித்யபடி திருமஞ்ஜனம் கண்டருள்கிறார். பலி மூர்த்தி ஆலய பரிவாரதேவதை ஆராதனத்தை பர்யவேக்ஷிக்கிறார்,

ஸ்வயம் வ்யக்தம், தைவம், ஆர்ஷம், பௌராணம் மாநுஷம், முதலிய பகவத் ப்ரதிஷ்டைக்கு ஏற்ப மூலவர் ரக்ஷிக்கும் தேச எல்லை வேறுபடுகிறது. ஸ்ரீவேங்கடாசலபதி, ஸ்ரீபத்ரிநாத், ஸ்ரீமுஷ்ணம் வராஹப்பெருமாள் முதலான பெருமாள் ஸர்வ லோகத்துக்கும் அனுக்ரஹிக்கும் தன்மையுடையவராவார். இப்படி பஞ்சபேர விஷ்டரானஎம்பெருமானை அர்ச்சையில் ஆராதனம் செய்து பகவத்தீர்த்தம் ஸ்வீகரிப்பதால் மஹா பாதங்களும் நாசமடைவதாக பகவத் ப்ருகு மஹர்ஷி அருளிச்செய்கிறார். அத்தீர்த்தமே அஜாக்ரதையாக பூமியில் சிந்துவதால் பாபம் உண்டாகும்-கவனத்துடன் பக்தி பூர்வமாக உளுந்து முழுகும் அளவே உள்ளங்கையில், கை அடியில் உந்தரீயம் நான்காக மடித்த நிலையில் வாங்கி வேகம், உறிஞ்சுதல், சப்தம் செய்தல், சிந்துதல் ஆகியன இல்லாமல் பக்வத் தீர்த்தம் உட்கொள்ளவேண்டும்-பிறகு, பகவானின் மிகுந்த திருவடிதீர்த்தத்தை நம் தலையில் தரிப்பதாலே பூமியிலுள்ள ஸகல தீர்த்தங்களிலும் ஸ்னானம் செய்த பலன் உண்டாகும். தீர்த்தம் ஸ்வீகரித்த பின் கைகளை அலம்புதல் பகவதபசாரமாகும் என்பதும் விஷ்ணோர் பாதோதகம் பீத்வா பச்சாத ஸுசி சங்கயா! ஹஸ்தௌ ப்ரக்ஷாளயேத்யஸ்து தமாஹுர் ப்ரஹ்மகாதுகம்!! என்ற மஹர்ஷி வசநத்தாலே நிரூபணமாகிறது. திருத்துழாய் ப்ரஸாதம் ஸ்வீகரிப்பதால் நூறு சாந்த்ராயணங்கள் (ஒரு வித ப்ராயச்சித்த விதி) செய்த பலன் உண்டாகும். பகவத்ப்ருகு மஹர்ஷியின் நிருக்தாதிகார வசநங்களாலே ஸ்ரீபாதுகை தாரண மஹிமையும் விளங்குகிறது. ஸ்ரீபாதுகை (ஸ்ரீசடாரி) பக்தர் தலையில் தரித்துக் கொள்வதால், வம்சவ்ருத்தியும், அபீஷ்டபலஸித்தி, தேஹாவஸாநத்திலே வைகுண்ட ப்ராப்தியுமடைகிறார். விரிவுக்கஞ்சி இத்துடன் முடித்துக்கொள்கிறோம். ஸர்வே ஜனாஸ்ஸுகிநோ பவந்து.

!! சுபம் !!

ஸ்ரீ :

ஸ்ரீவிகநஸமஹாகுரவே நம :

ஸ்ரீ வைகாநஸமும் வானப்ரஸ்தமும்

ஸ்ரீவைகாநஸ திவ்ய பகவத் சாஸ்த்ரப்ரவர பஞ்சாநநம். வ்யாகரண சில்பசிரோமணி
தைவக்ஞ மார்த்தாண்ட ப்ரவசண துரீண தேவயஜனஸாம்ராட்
ஸ்ரீசுதர்சன உபாசகர், ஸ்ரீவைகாநஸ ஞானதீபம்
Dr. S. V. சந்தானபட்டாச்சாரியார்.
சேலம் அழகிரிநாத சுவாமீ தேவஸ்தானம் பரம்பரை அர்ச்சகர்/மிராஸ்தார்

யேனான்யக்ஞப்த சூத்ரானாம் நேத்ரம்
நிஸ்திமிரீக்ருதம்।
சூத்ரம் வைகானஸம்ஹயேதத் சதுர்வர்க்க
பலப்ரதம்॥

ஔகேய சூத்திரமான ஸ்ரீவைகாநஸ சூத்ரத்தில் குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மாக்கள் செய்வதற்காக தயாரிக்கப்படும் முதல் அக்னி ஊகாக்னி ஆகும். அதாவது அடுப்பின் மீது வாணலியை வைத்து அதில் உமியை சேர்த்து வறுத்து உண்டாகும் அக்னி ஊகாக்னி எனப்படும். அப்படிப்பட்ட ஊகாக்னியினால் குழந்தைக்கு ஜாதகர்மா, நாமகரணாதிகள் - சௌளம் வரையில் செய்ய வேண்டும். இப்படி ஊகாக்னியை கையாளுவதால் இந்த சூத்ரத்திற்கும், இதை அனுஷ்டிப்பவர்களுக்கும் (ஔகேய சூத்ரம்) ஔகேயாக்னி சம்பன்னர்கள் என்று சிறப்புப் பெயர் ஏற்பட்டது இதனால் அந்த சிசுவுக்கு மாத்திரம் ''ஜாத மாத்ரோ மாத்ர:'' என்ற பெயரும் உண்டு.

உபநயனம் முதல் ஸமிதாதானாக்னியும் அதேபோல் பகவதாராதனமாகிற சமூர்த்தார்ச்சனா பகவத்யஜனம் செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டது. அந்த ப்ரஹ்மசாரிக்கு அப்போது ப்ராஹ்மணன் என்று பெயர். ''உபநீத : ஸாவித்ரி அத்யயனாத் ப்ராஹ்மண:'' ''யதோபநயனாதூர்த்வம்சமிதாதானமர்ஹதி। ததோபநயனாதூர்த்வம் விதினா அர்ச்சிது மர்ஹதி॥'' கருவிலிருந்தே பகவானை ஆராதிப்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டமதம் ஆனதால் இம்மதத்திற்கு கர்ப வைஷ்ணவர்கள் என்ற பெயரும் உண்டு. முழுமையாக வேதத்தை அத்யயனம் செய்து பாணிக்ரஹணம் வரை செய்து முடித்து ''பாகயக்ஞம்'' என்ற ஏழு வேள்விகளை செய்து முடிப்பவனுக்கு ''ச்ரோத்ரியர்'' என்ற பதவி உயர்வு உண்டாகிறது. ''வேதமதீந்ய சாரீரை ராபணிக்ரஹணாத் ஸம்ஸ்க்ருத: பாகயக்ஞை ரபி யஜன் ச்ரோத்ரிய:'' இவர்களுக்கு ஔபாசனாக்னி உரியதாகும்.

வேதத்தை தவறாமல் அத்யயனம் செய்து கொண்டும், ஹவிர்யக்ஞும் என்ற ஏழு வேள்விகளை செய்து முடிப்பவர்கள் ''அனூசானர்'' என்ற நிலையை அடைகிறார். ''ஸ்வாத்யாய பரச்சாஹிதாக்னி: ஹவிர்யக்ஞைரப்யனூசான:''

சோமயக்ஞும் என்ற ஏழு வேள்விகளை செய்து முடிப்பவர் ''ப்ரூணர்'' என்று அழைக்கப்படுகிறார். ''சோமயக்ஞைரபி ப்ரூண:''

இவ்வகையான சம்ஸ்காரங்கள் அனைத்தும் அடையப்பெற்று நியமம் பத்து, யமம் பத்து ஆகியவற்றை அனுஷ்டிப்பவர்கள் ரிஷிகல்பர் ஆகிறார்கள். இவர்களே அவாவற்ற நிலையில் இல்லறத்தை விடுத்து வானப்ரஸ்தர்கள் ஆகிறார்கள். ''ஸம்ஸ்காரைரேதை ருபேதோ நியமயமாப்யாம் ரிஷிகல்ப:''

வானப்ரஸ்தர்கள் இரு வகைப்படுவர் மனைவியுடன் உள்ளவர், மனைவி இல்லாதவர் மனைவியுடன் உள்ளவர்களுக்கு ச்ராமணகாக்னி. மனைவியை இழந்தவர்களுக்கு தர்மாக்னி. இவ்விருசாரார்களான வானப்ரஸ்தர்கள் இல்வாழ்க்கை சுகத்தை துறந்து பகவானை அடைவதற்கான பரமேகாந்தியின் தன்மையை அடைவதற்கான வழியை முதன்மையாக கருத வேண்டும். மனைவியுடன் இருப்பவரைவிட மனைவியை இழந்தவர்

க்ரிம் வைராக்னியத்துடன் தர்மாக்னியில் (பஞ்ச மஹா யக்ஞம்) ஐம்பெரும் வேள்வியையும், சிறப்பு வேள்விகளையும் முறையோடு தவறாமல் செய்து வருவதால் தர்மாக்னி சம்பன்னர் ஆகிறார்கள். அவர்கள் எல்லாவகையான வேள்விகளுக்கும் தகுதியுள்ளவர் ஆகிறார்கள்.

மனைவி உள்ளவர்கள் தனக்காகவும் மனைவிக்காகவும் நியமங்களை ஏற்று மனைவியையும் செய்யப் பணித்து இருவரும் தவறாமல் பரமேகாந்திகளாக பகவானை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு நித்யகர்மாக்களையும், நைமித்திக கர்மாக்களையும் குறைவின்றி செய்து வருவதால் ச்ராமணகாக்னி சம்பன்னர் ஆகிறார்.

ஆஹிதாக்னியாகவோ, அனாஹிதாக்னியாகவோ இருப்பவரின் மனைவி முதலில் மரணமடைந்தால் மனைவி ஜீவதசையுடன் இருப்பதாகக் கருதி கணவன் ஔபாசனம் செய்து பாதி அக்னியை (தர்மாக்னியை) சமித்சமாரோபணம் செய்து தனக்காக வைத்துகொண்டு மறுபாதியான ஔபாசனாக்னியை மனைவிக்கு கொடுக்கவேண்டும். இதையே ஸ்ரீவைகாநஸ க்ருஹ்ய சூத்ரத்தில் ஏழாவது ப்ரஸ்னத்தில் இரண்டாவது கண்டத்தில் ''ஆஹிதாக்னி ரனாஹிதாக்னிச்ச பூர்வம் பத்ன்யா மரணே ஸ்வகீயாக்னே: அர்த்தமாதாய ததக்னினா தை: மந்த்ரை: தாம் தாஹயித்வா ஸ்வகீய மர்த்தமக்னிம் அனுத்ஸ்ருஜன் நித்யமௌபாசனம் வைஸ்வதேவாதிகமேவ குர்யாத்'' இவ்வாறு கூறியுள்ளது. இப்படியாக வரப்பட்ட தர்மாக்னியில் நித்ய நைமித்திக கர்மாக்களை செய்து வருவதால் முன்பு கூறியபடி தர்மாக்னி சம்பன்னர் ஆகிறார்.

மனைவியுடன் உள்ளவர் ஔபாசனாக்னியை ச்ராமணகாக்னியாக முறையுடன் மாற்றிக்கொள்கிறார். அவரும் அக்னி சம்பன்னர் ஆகிறார்.

மனைவியை இழந்தவர் அதிகம் பொருள் படைக்காதவராகவும், ஆளுமைதன்மை இழந்தவராகவும், புத்ரபாக்கியம் பெற்றவராகவும் இருப்பின் அவர் மறுமணம் செய்து கொள்ளாமல் அபத்னீக வானப்ரஸ்தராக தர்மாக்னியையே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த வானப்ரஸ்தர்களே அங்கங்களுடன் கூடிய தான்கு வேதங்களையும் பயின்று தபோயோகமும் கைவரப் பெற்றவர்களாகும் போது ரிஷிகளாக உயர்கிறார்கள். ''ஸாங்க சதுர் வேததபோயோகாத்ரிஷி:''

இவர்கள் மேலும்மேலும் நாராயணனையே முக்கிய லக்ஷியமாகக் கொண்டு செயல்பட்டு வேறு எவ்வகையான பற்றோ பந்தமோ இல்லாதவாகளாக ஆகும்போது முனிகள் என்று சிறப்பித்து கூறப்படுகிறார்கள். ''நாராயண பராயணோ நிர்த்வந்த்வோ முநி :

இப்படியாக சம்ஸ்கார விசேஷத்தால் முதற்கூறியவர்களைவிட அடுத்து கூறுபவர்கள் சிறந்தவர்களாகி பகவானை அடைகிறார்கள் ''இதி ஸம்ஸ்கார விசேஷாத் பூர்வாத்பூர்வாத் பரோவரீயானிதி விக்ஞாயதே''.

ஸ்ரீயப்பதியான பகவான் தன்னை சகுண ரூபத்தில் ஆராதிப்பதற்காகவே தன்மனத்தகத்தே சிருஷ்டித்த ஸ்ரீவிகனஸாசார்யன் வழித்தோன்றல்களாக வந்த ஸ்ரீவைகாநஸர்கள் ''ப்ராஹ்ராஹம் விகனோமுனீ: ப்ரதிதினம் ஸாஹஸ்ர மாஹஸ்ஸஹே'' பகவதாராதனத்தையே உத்தமமான ப்ரஹ்ம வித்யையாகவும் பகவத்ப்ராப்தியே பரமோத்தாரகமாகவும் கொண்டுள்ளபடியாலும் ஜாதகர்மா முதலாக ''அந்த்யேஷ்டி'' வரையும் அக்னி சம்பன்னர்களாகவும், சுந்தவைதீக மார்க்கஸ்தர்களாகவும், வேதமந்த்ரத்தை தவிர்த்து எக்காரியங்களும் செய்யாதவர்களும், துயிலெழுந்து துயில் கொள்ளும் வரையிலும் வேதபாக மூலமாகவே அனைத்து சம்ஸ்காரங்களையும் பெற்றவர்களாகவும், எவ்விடத்தும் எப்போதும் அன்ய சூத்ர அபேக்ஷயற்றவர்களாகவும், ஸ்வசூத்ர விஹிதோத்க்ருஷ்டர்களாகவும், கருவிலேயே திரு உடையவர்களாகவும், பகவானையே பரமாசாரியராக ஏற்றுக்கொண்டு அவ்வண்ணமே பிதாபுத்ர பாரம்பர்யமாக வருபவர்களுமான ஸ்ரீவிகந ஸாசார்யரும் அவர்கள் வழித்தோன்றியவர்களான ப்ருக்வத்ரிமரீசி காஸ்யபர்களை முதன்மையாகக் கொண்டு அவர்கள் கூறிய முறை தவறாது ஆலய வழிபாடு செய்பவர்களாகவும், அவ்வழிபாட்டால் உலகம் உய்ய உதவுபவர்களாகவும், ஸ்ரீமத்நாராயணனே பரத்வம் என்று நிலைநாட்டுபவர்களுமான இவ்வைகாநஸர்களுக்கு வானப்ரஸ்தாஸ்ரம முறைகள் சிறந்த முக்கிய சாதனமாக வேறு சூத்ரங்களில் சொல்லப்படாமல் ஸ்ரீவைகாநஸ சூத்ரத்திற்கே தனி உரிமையாக ஒளிர்வதால் ஸ்ரீவைகாநஸமே வானப்ரஸ்தர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதாலும் இதைகாட்டிலும்சிறந்ததாகவும் எளிமையாகவும் ஸ்ரீய:பதியை அடைவதற்கும் இவ்வுலகம் உய்வதற்கும் வேறு உபாயமில்லை என்பது தெளிவாகிறது. இதனை பின்பற்றி ஸ்ரீவைகாநஸர்கள் யாவரும் உய்வோமாக.

—சுபமஸ்து—

ஸ்ரீ

ஸ்ரீவிகநஸமஹாகுரவே நம :

திருமாலுக்கு அமுது செய்விக்கத்தகுந்தவைகளும் அதன் சம்ஸ்க்ருதம்-தமிழ் திருநாமங்களும்

(A. இராமகிருஷ்ணபட்டாசாரியார், காலடிப்பேட்டை)

சம்ஸ்க்ருதம்		தமிழ்
குடோதனம்) குலான்னம்)	—	சர்க்கரைப்பொங்கல்
முத்கான்னம்	—	வெண்பொங்கல்
சுத்தான்னம்	—	சாதம்
க்ஷீரான்னம்	—	பாலும்சாதம்
மரீச்யன்னம்	—	மிளகோரை
திந்த்ரிணீரஸான்னம்	—	புளியோதரை
நாரிகேளான்னம்	—	தேங்காய்சாதம்
திலோதனம்) திலான்னம்)	—	எள்ளோரை
மாஷான்னம்	—	உளுந்தோரை
ஸங்கீர்ணம்	—	கதம்பம்
கேஸரீ	—	ஜீரா
காந்தவம்	—	தோசை
மாஷாபூபம்	—	வடை
குடாபூபம்	—	அப்பம்
கரம்பம்	—	இட்லி
ஹோளீ	—	போளி
லவணபிஷ்டம்	—	உப்புமாவு
பர்ப்பராப்யூஷம்	—	மொச்சைக்கொட்டை சுண்டல்
சணாகாப்யூஷம்	—	கடலை சுண்டல்
யாவகாப்யூஷம்	—	திருக்கண்ணமுது
பாயசம்	—	காராமணி சுண்டல்
லட்டுகம்	—	லட்டு
கோதும லட்டுகா	—	ரவைலட்டு
சஷ்குலீ	—	தேங்குழல்
மோதகம்	—	கொழுக்கட்டை
அதிரஸாபூபம்	—	அதிரஸம்
அபூபம்	—	பக்ஷணம், அப்பம், etc.,
கோக்ஷீரம்	—	பசும்பால்
நவநீதம்	—	வெண்ணெய்
உபதம்சம்	—	ஊறுகாய்

சம்ஸ்க்ருதம்		தமிழ்
திந்த்ரிணீகம்	—	குழம்பு
தக்ரம்	—	மோர்
ஸர்பிஸ்	—	பருப்பு
க்ருதம்	—	நெய்
ததி	—	தயிர்
தைமநம்	—	மோர்க்குழம்பு
ப்ருதுகம்	—	அவல்
லாஜம்	—	பொரி
சாகம்	—	கரியமுது
வார்த்தாகம்	—	கத்தரிக்காய் கரியமுது
ஸூரண சாகம்	—	கருணைக்கிழங்கு கரியமுது
படோலிகா சாகம்	—	புடலங்காய் கரியமுது
காரவல்லீ சாகம்	—	பாகற்காய் கரியமுது
கூஷ்மாண்டசாகம்	—	பூசணிக்காய் கரியமுது
இக்ஷுகண்டம்	—	கரும்புத்துண்டு
நாரிகேளம்	—	தேங்காய்
முகவாஸம்) நாகவல்லீ)	—	வெற்றிலை
கதலீபலம்	—	வாழைப்பழம்
ஆம்ரபலம்) சூதபலம்)	—	மாம்பழம்
ஜம்பூபலம்	—	நாவற்பலம்
பதரீபலம்	—	இலந்தைப்பழம்
கபித்தபலம்	—	விளாம்பழம்
பனஸபலம்	—	பலாப்பழம்
த்ராக்ஷாபலம்	—	திராட்சைப்பழம்
பீஜபூரபலம்	—	கொய்யாப்பழம்
தாடிமிபழம்	—	மாதுளம் பழம்
நாரங்கபலம்	—	நார்த்தம்பழம்
உர்வாருபலம்	—	வெள்ளரிப்பழம்
ஜம்பீரபலம்	—	எலுமிச்சம்பழம்

கர்மம் வைராக்கியத்துடன் தர்மாக்னியில் (பஞ்ச மஹா யக்ஞம்) ஐம்பெரும் வேள்வியையும், சிறப்பு வேள்விகளையும் முறையோடு தவறாமல் செய்து வருவதால் தர்மாக்னி சம்பன்னர் ஆகிறார்கள். அவர்கள் எல்லாவகையான வேள்விகளுக்கும் தகுதியுள்ளவர் ஆகிறார்கள்.

மனைவி உள்ளவர்கள் தனக்காகவும் மனைவிக்காகவும் நியமங்களை ஏற்று மனைவியையும் செய்யப் பணித்து இருவரும் தவறாமல் பரமேகாந்திகளாக பகவானை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு நித்யகர்மாக்களையும், நைமித்திக கர்மாக்களையும் குறைவின்றி செய்து வருவதால் ச்ராமணகாக்னி சம்பன்னர் ஆகிறார்.

ஆஹிதாக்னியாகவோ, அனாஹிதாக்னியாகவோ இருப்பவரின் மனைவி முதலில் மரணமடைந்தால் மனைவி ஜீவதசையுடன் இருப்பதாகக் கருதி கணவன் ஔபாசனம் செய்து பாதி அக்னியை (தர்மாக்னியை) சமித்சமாரோபணம் செய்து தனக்காக வைத்துகொண்டு மறுபாதியான ஔபாசனாக்னியை மனைவிக்கு கொடுக்கவேண்டும். இதையே ஸ்ரீவைகாநஸ க்ருஹ்ய சூத்ரத்தில் ஏழாவது ப்ரஸ்னத்தில் இரண்டாவது கண்டத்தில் ''ஆஹிதாக்னி ரனாஹிதாக்னிச்ச பூர்வம் பத்ன்யா மரணே ஸ்வகீயாக்னே: அர்த்தமாதாய ததக்னினாதை: மந்த்ரை: தாம் தாஹயித்வா ஸ்வகீய மர்த்தமக்னிம் அனுத்ஸ்ருஜன் நித்யமௌபாசனம் வைஸ்வதேவாதிகமேவ குர்யாத்'' இவ்வாறு கூறியுள்ளது. இப்படியாக வரப்பட்ட தர்மாக்னியில் நித்ய நைமித்திக கர்மாக்களை செய்து வருவதால் முன்பு கூறியபடி தர்மாக்னி சம்பன்னர் ஆகிறார்.

மனைவியுடன் உள்ளவர் ஔபாசனாக்னியை ச்ராமணகாக்னியாக முறையுடன் மாற்றிக்கொள்கிறார். அவரும் அக்னி சம்பன்னர் ஆகிறார்.

மனைவியை இழந்தவர் அதிகம் பொருள் படைக்காதவராகவும், ஆளுமைதன்மை இழந்தவராகவும், புத்ரபாக்கியம் பெற்றவராகவும் இருப்பின் அவர் மறுமணம் செய்து கொள்ளாமல் அபத்னீக வானப்ரஸ்தராக தர்மாக்னியையே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த வானப்ரஸ்தர்களே அங்கங்களுடன் கூடிய தான்கு வேதங்களையும் பயின்று தபோயோகமும் கைவரப் பெற்றவர்களாகும் போது ரிஷிகளாக உயர்கிறார்கள். ''ஸாங்க சதுர் வேததபோயோகாத்ரிஷி:''

இவர்கள் மேலும்மேலும் நாராயணனையே முக்கிய லக்ஷியமாகக் கொண்டு செயல்பட்டு வேறு எவ்வகையான பற்றோ பந்தமோ இல்லாதவாகளாக ஆகும்போது முனிகள் என்று சிறப்பித்து கூறப்படுகிறார்கள். ''நாராயண பராயணோ நிர்த்வந்த்வோ முநி :

இப்படியாக சம்ஸ்கார விசேஷத்தால் முதற்கூறியவர்களைவிட அடுத்து கூறுபவர்கள் சிறந்தவர்களாகி பகவானை அடைகிறார்கள் ''இதி ஸம்ஸ்கார விசேஷாத் பூர்வாத்பூர்வாத் பரோவரீயானிதி விக்ஞாயதே''.

ஸ்ரீயப்பதியான பகவான் தன்னை சகுண ரூபத்தில் ஆராதிப்பதற்காகவே தன்மனத்தகத்தே சிருஷ்டித்த ஸ்ரீவிகனஸாசார்யன் வழித்தோன்றல்களாக வந்த ஸ்ரீவைகாநஸர்கள் ''ப்ராஹ்ராஹ்ரம் விகனோமுனீ: ப்ரதிதினம் ஸாஹஸ்ர மாஹஸ்ஸஹே'' பகவதாராதனத்தையே உத்தமமான ப்ரஹ்ம வித்யையாகவும் பகவத்ப்ராப்தியே பரமோத்தாரகமாகவும் கொண்டுள்ளபடியாலும் ஜாதகர்மா முதலாக ''அந்த்யேஷ்டி'' வரையும் அக்னி சம்பன்னர்களாகவும், சுந்தவைதீக மார்க்கஸ்தர்களாகவும், வேதமந்த்ரத்தை தவிர்த்து எக்காரியங்களும் செய்யாதவர்களும், துயிலெழுந்து துயில் கொள்ளும் வரையிலும் வேதபாக மூலமாகவே அனைத்து சம்ஸ்காரங்களையும் பெற்றவர்களாகவும், எவ்விடத்தும் எப்போதும் அன்ய சூத்ர அபேக்ஷயற்றவர்களாகவும், ஸ்வசூத்ர விஹிதோத்க்ருஷ்டர்களாகவும், கருவிலேயே திரு உடையவர்களாகவும், பகவானையே பரமாசாரியராக ஏற்றுக்கொண்டு அவ்வண்ணமே பிதாபுத்ர பாரம்பர்யமாக வருபவர்களுமான ஸ்ரீவிகந ஸாசார்யரும் அவர்கள் வழித்தோன்றியவர்களான ப்ருக்வத்ரிமரீசி காஸ்யபர்களை முதன்மையாகக் கொண்டு அவர்கள் கூறிய முறை தவறாது ஆலய வழிபாடு செய்பவர்களாகவும், அவ்வழிபாட்டால் உலகம் உய்ய உதவுபவர்களாகவும், ஸ்ரீமத்நாராயணனே பரத்வம் என்று நிலைநாட்டுபவர்களுமான இவ்வைகாநஸர்களுக்கு வானப்ரஸ்தாஸ்ரம முறைகள் சிறந்த முக்கிய சாதனமாக வேறு சூத்ரங்களில் சொல்லப்படாமல் ஸ்ரீவைகாநஸ சூத்ரத்திற்கே தனி உரிமையாக ஒளிர்வதால் ஸ்ரீவைகாநஸமே வானப்ரஸ்தர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதாலும் இதைகாட்டிலும்சிறந்ததாகவும் எளிமையாகவும் ஸ்ரீய:பதியை அடைவதற்கும் இவ்வுலகம் உய்வதற்கும் வேறு உபாயமில்லை என்பது தெளிவாகிறது. இதனை பின்பற்றி ஸ்ரீவைகாநஸர்கள் யாவரும் உய்வோமாக.

—சுபமஸ்து—

ஸ்ரீ

ஸ்ரீவிகநஸமஹாகுரவே நம :

திருமாலுக்கு அமுது செய்விக்கத்தகுந்தவைகளும் அதன் சம்ஸ்க்ருதம்-தமிழ் திருநாமங்களும்

(A. இராமகிருஷ்ணபட்டாசாரியார், காலடிப்பேட்டை)

சம்ஸ்க்ருதம்		தமிழ்
குடோதனம்) குலான்னம்)	—	சர்க்கரைப்பொங்கல்
முத்கான்னம்	—	வெண்பொங்கல்
சுத்தான்னம்	—	சாதம்
க்ஷீரான்னம்	—	பாலும்சாதம்
மரீச்யன்னம்	—	மிளகோரை
திந்த்ரிணீரஸான்னம்	—	புளியோதரை
நாரிகேளான்னம்	—	தேங்காய்சாதம்
திலோதனம்) திலான்னம்)	—	எள்ளோரை
மாஷான்னம்	—	உளுந்தோரை
ஸங்கீர்ணம்	—	கதம்பம்
கேஸரீ	—	ஜீரா
காந்தவம்	—	தோசை
மாஷாபூபம்	—	வடை
குடாபூபம்	—	அப்பம்
கரம்பம்	—	இட்லி
ஹோளீ	—	போளி
லவணபிஷ்டம்	—	உப்புமாவு
பர்ப்பராப்யூஷம்	—	மொச்சைக்கொட்டை சுண்டல்
சணாகாப்யூஷம்	—	கடலை சுண்டல்
யாவகாப்யூஷம்	—	திருக்கண்ணமுது
பாயசம்	—	காராமணி சுண்டல்
லட்டுகம்	—	லட்டு
கோதும லட்டுகா	—	ரவைலட்டு
சஷ்குலீ	—	தேங்குழல்
மோதகம்	—	கொழுக்கட்டை
அதிரஸாபூபம்	—	அதிரஸம்
அபூப:	—	பக்ஷணம், அப்பம், etc.,
கோக்ஷீரம்	—	பசும்பால்
நவநீதம்	—	வெண்ணெய்
உபதம்சம்	—	ஊறுகாய்
திந்த்ரிணீகம்	—	குழம்பு
தக்ரம்	—	மோர்
ஸூபம்	—	பருப்பு
க்ருதம்	—	நெய்
ததி	—	தயிர்
தேமநம்	—	மோர்க்குழம்பு
ப்ருதுகம்	—	அவல்
லாஜம்	—	பொறி
சாகம்	—	கரியமுது
வார்த்தாகம்	—	கத்தரிக்காய் கரியமுது
ஸூரண சாகம்	—	கருணைக்கிழங்கு கரியமுது
படோலிகா சாகம்	—	புடலங்காய் கரியமுது
காரவல்லீ சாகம்	—	பாகற்காய் கரியமுது
கூஷ்மாண்டசாகம்	—	பூசணிக்காய் கரியமுது
இக்ஷூகண்டம்	—	கரும்புத்துண்டு
நாரிகேளம்	—	தேங்காய்
முகவாஸம்) நாகவல்லீ)	—	வெற்றிலை
கதலீபலம்	—	வாழைப்பழம்
ஆம்ரபலம்) சூதபலம்)	—	மாம்பழம்
ஜம்பூபலம்	—	நாவற்பலம்
பதரீபலம்	—	இலந்தைப்பழம்
கபித்தபலம்	—	விளாம்பழம்
பனஸபலம்	—	பலாப்பழம்
த்ராக்ஷாபலம்	—	திராட்சைப்பழம்
பீஜபூரபலம்	—	கொய்யாப்பழம்
தாடிமிபழம்	—	மாதுளம் பழம்
நாரங்கபலம்	—	நார்த்தம்பழம்
உர்வாருபலம்	—	வெள்ளரிப்பழம்
ஜம்பீரபலம்	—	எலுமிச்சம்பழம்

ஸ்ரீ:

பகவதாராதனத்திற்குரிய புஷ்பங்கள்

ஸுதர்ஸன S. ஸந்தான பட்டாச்சாரியார்

ஸ்ரீவைகாநஸ பகவச்சாஸ்த்ர வித்வான், பட்டணம் கோவில்

ஸ்ரீமந்நாராயணன் அனைத்து நிலைகளும் கடந்த பரனாய் இருந்தாலும், நித்ய ஸூரி களுக்காக ஸ்ரீவைகுண்டத்திலே பஞ்ச வ்யூ ஹாத்மகனாய் விளங்குகின்றான். பக்த பரா தீனனாய் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த் தம் விபவாவதாரங்கள் செய்கின்றான். யோகீந்த்ரர்கள், ருஷிகள், முநிவர்கள் ஹ்ருத யத்திலே ப்ரகாசிக்கின்றான். பின்னையும், ஸாமாந்யர்களும் அனுபவிக்கத்தகுந்தவனாய் அர்ச்சாரூபியாய் ஆலயங்களிலும் க்ருஹங்களி லும் எழுந்தருளியிருக்கின்றான்.

ஸ்ரீவைகாநஸ பகவச்சாஸ்த்ரம் மூலம் ஸ்ரீய:பதியை ஆலயங்களில் இன்றளவும் அநாதிகாலம் முதலாக ஸ்ரீவைகாநஸர்கள் அர்ச்சித்து வருகிறார்கள். ஸ்ரீய: பதியை ஆரா திப்பதைப்பற்றி மரீசி, ப்ருகு, அத்ரி, காசியபர் முதலான ருஷிகள் மூலம் லோகத்துக்கு அறி வித்தவர் பகவானின் மாநஸபுத்ரரான ஸ்ரீமத் விகநஸாசாரியர். பகவந்மரீசிமஹர்ஷி அருளிச் செய்த ஆனந்த ஸம்ஹிதையை ஆதாரமாகக் கொண்டு திருவாராதனத்திற்குரிய புஷ்பங் களை எடுத்துரைக்க தலைப்பட்டாயிருக் கிறது.

மல்லிகை, ஜாதீ, செண்பகம், துளஸீ, குடைமல்லி, அலரிப்பூ, தாமரை, செந்தாமரை, வெள்ளை ஆம்பல், அரளிபூ, நந்தியாவட்டை, தாபஸாங்குரம், புனமுருக்கு, கர்ணிகாரம், மந்தாரை, காயம்பூ, தாழம்பூ, மகிழம்பூ, தவ நம், மருதப்பூ, சரபுன்னை, வஸந்தபுஷ்பம், த்விவல்லீ, முல்லை, செங்கழுநீர்ப்பூ மற்றும் பலமரம், கொடிகளிலுண்டான அழகான, ஸுகந்தமான பார்க்கப்ரியமான புஷ்பங்கள் பகவானுக்கு ஆராதிக்க உகந்தவை.

புஷ்பங்களில் வாசனையுள்ள தாமரை உத்தமம். துளஸீ இலை, பூ இரண்டும் ஹரிக்கு மிகப்ரியமானவை. அருகம்புல், துளஸீ, வில் வம், அலரிபுஷ்பம், செண்பகம், விஷ்ணுக்ராந் தம் ஆகியன சர்வ காலங்களிலும் பெருமாள் அர்ச்சனைக்கு உரியன. வெண்ணிற புஷ்பங் கள் சாந்திகரம், மஞ்சள்-புஷ்டிகரம், கறுப்பு வசியகரம், சிவப்பு-த்வேஷகரம். ஆனால் மேற் குறிப்பிட்ட சிவப்பு புஷ்பங்கள் கிரஹிக்கலாம். அப்பொழுதே மலர்ந்த தாமரை அல்லது ஒரு நாளைக்குட்பட்டது உத்தமம். 3 நாள் மேற் பட்ட தாமரை விலக்கவேணும். பகவத்கசிய மஹர்ஷி ஜ்ஞாந காண்டத்தில் அருளிச்செய்த ப்ரகாரம் பக்தர் ஆசமனம் கைகளை அலம்பு தல் செய்து புஷ்பகொடியை சேவித்து வாருண மந்த்ரத்தாலே வருணனுக்கும் ஸோமன், லக்ஷ்மீக்குமாக 3 புஷ்பங்கள் சேர்த்து சுத்த மான பாத்திரத்திலோ உத்தரீயத்திலோ மேற் சொன்ன புஷ்பங்களை ''தேவஸ்யத்வா'' என்ற மந்த்ரம் கூறி மரம், கொடிகளிலிருந்து பறிக்கவேண்டும். சேகரித்த பாத்ரத்தை இலை யால் மூடி புஷ்பரக்ஷகனுக்கு ஒரு புஷ்பம் சேர்த்து, பின் ஆலயத்திற்கு சென்று ஸமர்ப் பிக்கவேணும் செல்லப்பட்ட புஷ்பங்கள் கிடைக்காத போது இலை, அங்குரம், அக்ஷதை, தீர்த்தத்தாலாவது பகவானை அர்ச்சிக்க வேண்டும்.

செம்பருத்தி, எருக்குபூ, வெண்ணொச்சி, வாசனையில்லாத புரசைப்பூ ஆகியவை மற்றும் பழையது, உலர்ந்தது, ஜீர்ணமானது, நகம், மயிர் உடையது, வேறு வர்ணங்கள் மேற்பூச்சு பூசப்பட்டவை, நிர்மால்யத்தில் நன்குபட்டவை மயான சண்டாள வாஸஸ்தல ஸமீபத்தில் உண் டானவை, மனிதர், பசுக்களால் முகரப் பட்டவை, வாய்காற்றுபட்டவை ஆகியவை பூஜைக்குகந்தவையல்ல.

வண்டுகள், தேனீக்கள் முகர்ந்த புஷ்பங் களை கிரஹிக்கலாம். துளஸீக்கு அடுத்தபடி யாக எல்லாவற்றினும் ஸ்வர்ண (தங்க) புஷ் பம் சிரேஷ்டம், நிர்மால்யமாகாது. சுத்தம், ஸ்வர்ண புஷ்பம், ஆபரணம், முத்து மணி

ாலைகள் தீர்த்தத்தால் அலம்பப்பட்டு மீண்
ம் ஆராதனத்திற்குரியனவாகும்.

திருத்தளிகைகள்-விநியோகம்

பகவதாராதனத்தில் சிறிய வெள்ளரிக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய் மற்றும் ரைக்காய் தளிகைக்கு கூடாது. ஜலத்தினால் த்தமான பாத்ரத்தின் வெளியில் திருமண் ாப்பு இட்டு வாருண மந்த்ரங்களாலே ஜலம் சேர்த்து சுத்தாந்நம் முதலான அன்ன வகை ள் செய்து, இப்பாத்ரத்தை ப்ரணவம் சொல்லி ூக்கி சங்கு, தாரை முதலான வாத்ய சப்தங்க ளோடு பகவத்ஸன்னிதியில் வைத்து நித்யபடி விவேதனம் செய்ய வேண்டியது.

